# திசை

செப்ரெம்பர் - 1982

## பாரதி நூற்றுண்டுச் சிறப்பிதழ்

★ நீலாவணனின் வடமீன்

★ ஓர் ஆண்மை நாறுகிறது

★ பாரதி மீண்டும் வருகிறுன்.

★ குறுநாவல்

★ குறுங்காவியம்

★ சிறுகதை

★ கவிதை

★ கட்டுரை

★ விமர்சனம்

★ சித்திரம்



ரூபா 2-50

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை

பாரதி சிறப்பிதழ்
செப்ரெம்பர் - 1982

# சமதர்மவாதி பாரதி

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். 'எழுமைக்கும் கல்வி ஏமப்புடைத்து' என்றார் வள்ளுவர். ஆற்றலும் புலமையும் கலைத்திறனும் சிலருக்குக் கூடப்பிறந்த கொடையாயிருக்குமோ-?

ஆமாம்; பாரதிக்கு இது சாலவும் பொருந்தும்.

பாரதிக்குரிய தனிச்சிறப்பு என்னவெனில், மனதில் பட்டதையெல்லாம், தெளிவாக - மற்றவர் மனதில் பதியும்படி சொல்லியிருப்பதுதான். கவிநயம் குலையாமல், கருத்துச் செறிவோடு, உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் கவி சமைப்பதில் தன் முத்திரையைப் பொறித்தவன் பாரதி.

பாரதியைப்போலப் பாமர மக்களை - பஞ்சை பராரிகளை - அடிமைத் தளையிலகப்பட்டு அல்லற்பட்டவர்களைக் கவர்ந்திட்ட கவிஞர் யாருமிலர்.

காலத்திற்கேற்ற மாற்றத்தோடு, சமுதாயப் புரட்சியை - விடுதலை வேட்கையை - மக்கள் உணர்வுகளில் வித்திட்டு ஊன்றியவன் பாரதி.

'பாரதியின் பாட்டைக் கேட்டால் செத்த பிணம்கூட உயிர்பெற்றுவிடும்; அடிமைப்பட்டிருக்கும் நாடு ஐந்து நிமிடங்களிலேயே விடுதலை பெற்றுவிடும்' என்று, ஆங்கிலேய நீதிபதியினாலேயே உணரப்பட்டவன் பாரதி.

பாரதிகாலத்தில் பல பாரதிகள் இருந்தாரெனினும், பாரதி என்ற பட்டத்தையே தன் பெயராக நிலைநாட்டியவன் 'சுப்பு' எனப்படும் சுப்பிரமணியனே.

பாரதிக்கும் பதினொன்றுக்குமிடையே ஒரு நெருங்கிய தொடர்புண்டு. பதினோராம் திகதி ஜனித்து, பதினொரு வயதினிலே 'பாரதி' எனும் பட்டம் பெற்று, பதினோராம் திகதியிலேயே மரணித்தவன் பாரதி. இன்று அகில உலகமும் பெருமை கொண்டாடி விழாவெடுத்துச் சிறப்பிக்கும் பாரதியின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் ஆகப் பதினொரு பேர்தான் என்றால் ஆச்சரியமாயில்லையா? பாரதிக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த வருடத்தில்கூட, முதல் பதினொரு மாதங்கள் மேலதிகமாகவே கொண்டாடப்படுகிறதல்லவா?

எட்டயபுரத்தில் 'பாரதி' பட்டம் பெற்றதோடு பாரதி ஓய்ந்துவிடவில்லை; எட்டயபுரவரசருக்கு ஆசிரியராகவும் சிலகாலமிருந்தவர்.

வெவ்வேறு காலகட்டங்களில் 'சுதேசமித்திரன்', 'இந்தியா', 'தேச பத்தன்' என்ற பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களையும் அலங்கரித்தவர் பாரதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாதிக் கொடுமைகள் வேண்டாம்; — அன்பு
தன்னில் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்; — தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்"

என்று சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், தொழில் மகிமையையும் உணர்த்திய பாரதி, வெறும் வாய்ச்சொல்லோடு நின்றுவிடவில்லை.

தான் அணிந்திருந்த பூணூலையே நீக்கிவிட்டு, 'ஆதித் திராவிடன்' எனக் கேலிசெய்யப்பட்ட ஒரு நண்பனுக்குப் பூணூல் அணிவித்து மகிழ்ந்த புரட்சியாளன்.

"நாலு வகுப்பும் இங்கொன்றே; — இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்,
வேலை தவறிச் சிதைந்தே — செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி"

என்று, ஒற்றுமையின் பலத்தை உணர்த்தியதோடு நின்றுவிடாமல், மதங்கள் கூட ஒரே மார்க்கத்தையே காட்டுவதாக உணர்ந்து, 'இஸ்லாம்' மார்க்கத்தின் மகிமைபற்றிப் பல சொற்பொழிவுகளாற்றினுன்.

இந்தத் தமிழ்மகனுக்கு அஞ்சலி செலுத்துவது நமது கடமையல்லவா? எனவே, அவன் அமரத்துவமெய்திய இந்தப் புரட்டாதித் திங்களிலேயே நாமும் அவனுக்கு மலர் வெளியிட்டு, நம்மை அவனிடத்தில் அர்ப்பணிக்கிறோம்.

எத்தனை கதைகள், கட்டுரைகள் எழுதினாலும், 'கவிஞன்' என்ற முத்திரையுடன் வாழ்பவன் பாரதி. எனவே, இந்த மலரைக் கவிதைகளாலேயே பெரிதும் நிரப்பியிருக்கிறோம்.

தென்னாட்டின் தீந்தமிழ்க் கவிஞனுக்கு அஞ்சலி செலுத்தும் அதே வேளையில், நம்நாட்டுக் கவிஞனையும் நினைவு கூருமுகமாக, அமரர் நீலாவணனின் ''வடமீன்'' என்ற குறுங்காவியத்தையும் இந்த இதழில் முழுமையாகவே தந்திருக்கிறோம். எம்மிடையே வாழ்ந்து மறைந்த இன்னொரு பெருங் கவிஞராகிய ''மகாகவி''யின் இனிய படைப்பொன்றையும், விரைவில் உங்கள் கைகளில் சமர்ப்பிப்போம்.

'பாரதி சிறப்பித'ழுக்கெனப் பிந்தி வந்து சேர்ந்தவற்றுள் சிறப்பானவற்றை இனிவரும் இதழ்களில் தொடர்ந்து வெளியிடுவோம்.

இந்த இதழ் சிறப்புற மலர ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி!

— ஆசிரியர்.

---

## அட்டையில்...

குயில் பாட்டுப் பாடி
நடிப்புச் சுதேசிகளைச் சாடி
போர் முரசங் கொட்டி
புரட்சிக் கொடி நாட்டிய
**மகாகவி பாரதி.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சல்

மீனவர் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ச. முருகானந்தன் அவர்களின் ''நியாயமான போராட்டங்கள்'' ஆரம்பமே விறுவிறுப்பாக அமைந்துள்ளது. இரு சிறு கதைகளுமே மனதைக் கவர்ந்தன. நெருப்பு மல்லிகை பற்றிய விமர்சனம் நல்லதோர் தரிசனம். சாக்கடைகளைக் கிண்டி சந்தியில் வைத்தமாதிரி, இங்கு நல்லவற்றை ஒதுக்கிவிட்டு அசல் கலவைகளை கதைகள் என்று பாராட்டி பரிசும் வழங்குகிறார்களே ... இனியாவது இதுபற்றிச் சிந்திப்பார்களா ?

சரசாலை செல்வி கங்கா மங்கை.

ஜூலை இதழில் எஸ். கே. ராஜரெட்ணம் என்பவர் எழுதிய துணுக்கு, சுமார் பத்து வருடங்களுக்கு முன்னரே 'சிந்தாமணி'யில் 'சேர்ந்து சிரிப்போம்' பகுதியில் ஆர். எஸ். பார்த்திபன் என்பவர் எழுதியதன் அப்பட்டமான காப்பியாகும். சிறுகதை, கவிதை காப்பிடித்தல் வரிசையில் துணுக்கும் சேர்ந்து கொண்டதோ? காலங் கடந்தால் யார் கண்டு கொள்ளப் போகிறார் என்ற துணிவோ? வேண்டாம் ஐயா இந்த விபரீதம் !

பண்டாரவளை மனோரஞ்சிதம்.

எத்தனையோ ஏடுகள் தோன்றி தாக்குப் பிடிக்க முடியாமல் தடம்புரண்டுள்ள இந்தக் காலகட்டத்தில், துணிகர முயற்சியாக ''தாரகை'' உதித்திருப்பது அதிர்ச்சியைத் தந்தாலும், துணிவைப் பாராட்டுகிறேன். இலக்கியப் படைப்புகளுக்கும். தமிழ் மக்களது பண்டைய கலாச்சார சிறப்புகளுக்கும் ''தாரகை'' இடம் தந்து எம்மை வளர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

கொழும்பு-4 ராஜா திவ்வியராஜன்.

''தாரகை'' ஆகஸ்ட் இதழ் தரமான ஆக்கங்களுடன் ஒளிர்கின்றது. அன்புமணியின் ஆணித்தரமான விமர்சனம், இந்திராணி தாமோதரம்பிள்ளையின் சிறுகதை பாராட்டத் தக்கன. இடையிடையே மின்னும் கவிமுத்துக்களும்-குறிப்பாக ஸ்ரீதேவிப்பிரியாவின் தேயிலைப் பூக்கள்-சிந்திக்க வைக்கின்றன. வானத்துத் தாரகை போல் என்றென்றும் உங்கள் பணி நிலைத்திருக்க என் வாழ்த்துக்கள்.

யாழ்ப்பாணம் எஸ். உமாகாந்தன்.

ஒரு இலக்கிய முயற்சி வளர்ச்சியடைவதும், வீழ்ச்சியுறுவதும் வாசகர்கள் சுட்டிக் காட்டும் உண்மையான விமர்சனத்திலேயே தங்கியுள்ளது. அந்த வகையில் தாரகையை எடுத்துக்கொண்டால, குறையாக என்னால் எதையும் கூறமுடியாதுள்ளது. இதை நான் வெறும் புகழ்ச்சிக்காகக் கூறவில்லை. எளிமையான முறையில் இலக்கியத் தொண்டு புரிய வந்துள்ள ''தாரகை'' மின்னி மறைந்திடாமல் விண்ணில் வலம்வர ஈழத் தமிழர்களே, ஈன்றிடுவோம் நல்லாதரவை !

ஸ்பிரிங்வெளி எஸ். கே. ராஜரெத்தினம்.

Donated By

LOGES RESTAURANT

KALKUDAH.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி யார்?

பாரதியார் யார் என்ற இவ்வினாவிற்கு விடைதேடும் போது, அவ்விடைகள் வரலாற்று ரீதியாக அமையவேண்டும் என்ற எண்ணமே அ கமானோர் மனதில் உண்டாகின்றது. வரலாற்று ரீதியாக பாரதி யார் என்பதைக் கூறுவதானால் அவர் பெயர் சுப்பிரமணியன். செல்லப்பெயர் சுப்பையா. தந்தையின் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் பெயர் இலட்சுமி அம்மாள். எட்டயபுரத்தில் பிறந்த இவர் பதினொரு வயதில் சமஸ்தான புல்வர்களால் கலைமகள் என்ற கருத்தையுடைய 'பாரதி' என்னும் பெயர் சூட்டப்பட்டார் என்று தொடர்ந்து கூறிக்கொண்டே போகலாம். ஆனால் பாரதி யார் என்ற கேள்விக்கு என்னுடைய மனதில் எழும் விடைகளைக் கூறி நான் காணும் பாரதி எப்படிப்பட்டவர் என்பதை உங்கள் முன் காட்ட விரும்புகிறேன்.

மகாகவி சுப்பிரமணியபாரதி மறைந்து அறுபத்தொரு ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் அதாவது 'ரூ இன்வன்' 'திறீ இன் வன்' எல்லாம் மலிந்து கிடக்கும் இந் நாட்களில் மகாகவி பாரதியை ஒரு 'ஆல் இன் வன்' (all in on) என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. மகாகவி பாரதி 1904ம் ஆண்டு மதுரையில் இருந்த சேது சமஸ்தானபதிகளின் உயர்தரக் கலாசாலையில் சிலகாலம் தமிழாசிரியராகத் தொண்டாற்றினார். எனவே இந்த இடத்தில் அவர் ஒரு ஆசானாகிறார். அதன் பின் சுதேசமித்திரன் செய்தித்தாளில் உப ஆசிரியராக இருந்து சிறந்த தொண்டாற்றினார். ஆக இந்த இடத்தில் பாரதியார் ஒரு பத்திராசிரியர் என்ற சிறப்புப் பெறுகிறார்.

1908ம் ஆண்டில் 'இந்தியா' என்ற பத்திரிகை விவகாரத்தினால் அரசாங்கம் பிறப்பித்த பிடி விருந்துக்குத் தப்பி புதுச்சேரிக்குச் சென்று மறைந்து வாழ்ந்தார். இங்கே இவரை ஒரு கோழை என்று கூறலாமல்லவா?

அவரது பாடல்களிலே

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ! — கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி! என்றும்

தேவியர் மானம் என்றும்
தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வதல்லால்! — கிளியே!
நம்புத லற்றா ரடீ! என்றும்

சிந்தையிற் கள்விரும்பிச்
சிவசிவ வென்பதுபோல்
வந்தேமாதர மென்பார்! — கிளியே
மனதி லதனைக் கொள்ளார்

என்றும் பாடி அவர் வாழ்ந்த காலத்து மக்கள் சிலரைக் கிண்டல் செய்துள்ளார். எனவே இங்கே இவர் ஒரு கிண்டற் பேர்வழியாகக் காட்சியளிக்கிறார்.

இன்னுமொரு பாடலிலே

'குடு குடு குடு குடு குடு குடு குடு
நல்லகாலம் வருகுது நல்லகாலம் வருகுது
சாதிகள் சேருது சண்டைகள் தொலையுது'

என்றுபாடி குடுகுடுப்பைக்காரனாகிறார்.

இந்தக் குடுகுடுப்பைக்காரன் பேராசைக்காரன் ஆவதை

'எனக்கு வேண்டும் வரங்களை இசைப்பேன்
கேளாய் கணபதி கனக்கும் செல்வம்,
நூறுவயது
இவையுந்தர நீ கடவாய்' என்றும்

'காணி நிலம் வேண்டும் பராசக்தி
காணி நிலம் வேண்டும்'
என்று ஆரம்பித்து

**திருமதி**
**பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அந்தக் காணி நிலத்தினிலே ஒரு மாளிகை
பத்துப் பன்னிரெண்டு தென்னை மரங்கள்'

என்று இன்னும் என்னவெல்லாமோ வேண்டும் என்று பாடும் பாட்டிலும் அவதானிக்கக்கூடிய தாய் உள்ளது.

பேராசைக்காரனுக இருந்த சுப்பிரமணிய பாரதியார் ஒரு சமாதான நீதவானுக மாறுவதையும் நாம் காணலாம்.

'யாரும் பணிந்திடும் தெய்வம் பொருள்
யாவிலும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று
இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்'
என்றும்
'வேதியர் ஆயினும் ஒன்றே அன்றி
வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே'
என்றும்
'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'

என்றும் கூறுகிறுர்.

அரசனுக, கோழையாக, கிண்டல் பேர் வழியாக, குடுகுடுப்பைக்காரராக, பேராசைக்காரராக, சமாதான நீதிவானுகத் தோற்றமளித்த சுப்பிரமணிய பாரதியை இவையனைத்திற்கும் மேலானதொரு தோற்றத்திலும் நான் காண்கின்றேன்.

முப்பத்தொன்பது ஆண்டு காலமே வாழ்ந்து மரணமெய்திய அவர் அந்த வயது எல்லைக்குள் பெண்களின் காவலனுகத் திகழ்ந்ததையும் நான் காண்கின்றேன்.

அந்தப்பாடல்களில் ஒன்று இதோ

'பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்
புவிபேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்'

என்று மகாகவியின் கற்பனையில் உருவாகி ஏடேறிய இந்தக் கவிதைதான் நானும் என் போன்ற சகோதரிகளும் இவ்வளவு முன்னேற்றம் அடைந்து 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்ற கூற்றுக்கிணங்க வாழ்வதற்கு வழிகோலியதோ என்ற ஒரு பிரமை அன்னுருக்குப் பெண்குலத்தின் சார்பில் நன்றி கூற என்னைத் தூண்டுகிறது.

உயர்ந்த கூடகோபுரங்களுக்கு மத்தியில் எத்தனையோ மைல் தூரத்துக்கு மரங்களையே காணக்கிடைக்காத நகரங்களில் வாழும் மேல் நாட்டவர்கள் விடுதலை நாட்களில் உண்ண உணவும், தூரதிருஷ்டிக்கண்ணுடியும் கையிலேந்தி வெகுதொலைவில் இருக்கும் கிராமங்களுக்குச் சென்று மணித்தியாலக் கணக்கில் மரங்களின் கீழ் இருந்து தூரதிருஷ்டிக் கண்ணுடியின் ஊடாகப் பறவைகளைப் பார்த்து மகிழ்வார்கள். இதை அவர்கள் 'பறவைகளை அவதானித்தல்' (Bird watching) என்று சொல்வார்கள். அது பணவசதி படைத்தவர்களுக்கு ஒரு பொழுது போக்கு.

இங்கே கூடப் பாரதியாரின் பாடல்களில் ஆங்காங்கே அவர் செய்த 'பேட் வாச்சிங்' காணப்படுவதை நாம் காணலாம்.

'கா வென்று கத்திடும் காக்கை
தென்னை மரக்கிளை மீதில் ஆங்கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்
சின்னஞ் சிறிய குருவியது 'ஜிவ்' என்று
விண்ணிடை யூசலிட்டேகும்
மன்னப் பருந்து ஓரிரெண்டு
மெல்ல வட்டமிட்டுப்
பின் நெடுந்தொலை போகும்'

என்றெல்லாம் பாடியுள்ளார்.

இவருக்கு நாட்டுப்பற்று எவ்வளவு தூரம் இருந்தது என்பதை அறிவதற்கு அவர் இயற்றிய பாடல்களில் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்ற ஒரு பாட்டுப் போதுமானது. இந்தப் பாடலில் ஒரு விஷேடம் இருக்கின்றது. ஆகவே தொடர்ந்து ஒருசில அடிகளை எழுதுகிறேன் படித்துப் பாருங்கள்.

செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே
எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே

பாடலின் இந்த அடிகளிலே தந்தையர் நாடென்ற பேச்சினிலே என்ற சொற்களை நாம் அவதானிக்க வேண்டும்.

சர்வதேச சமய மகாநாட்டுக்குச் சென்று ஆங்கில மொழியிற் பேசும்போது உலகத்திலேயே முதன்முதலாகச் 'சகோதர சகோதரிகளே!' என்று பேசியவர் சுவாமி விவேகானந்தர். இது நடந்த இடம் சிகாகோ நகரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு முன் 'சீமான்களே சீமாட்டிகளே' என்று பேசுவதுதான் வழக்கமாய் இருந்தது.

ஆயின் இங்கே பாரதியார் தமது பாடலிலே தந்தையர் நாடென்ற பேச்சினிலே என்று பாடியுள்ளார். அன்று தொட்டு இன்று வரை தாய் நாடென்றே குறிப்பிடப்பட்டு வருகிறது. ஆனுல் பாரதியார் ஒருவரே தந்தையர் நாடென்று பாடி ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளார். பாடலில் குறிப்பிடப்பட்ட அந்த அடியில் அவர் தனது தந்தையை கௌரவித்துள்ளார் என்றும் நாம் கொள்ளலாம். அதேவேளையில் தாய்நாடு என்று பேசும்போது பற்று, அன்பு, தியாகம், போற்றல் என்ற சொற்களே தொடர்ந்து உபயோகிக்கப்படுகின்றன. ஆனுல் மகாகவி பாரதி இங்கே கூறுகிருர்.

தந்தையர் நாடு என்று பேச்சினிலே
ஒருசக்தி பிறக்குது மூச்சினிலே என்று.

நாட்டுப்பற்றுடன் மட்டும் அவர் நின்றுவிடவில்லை. அத்துடன் போட்டிபோட்டு நிற்கின்றது அவர் தமிழ்ப்பற்று.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணேும்... என்று
பாட்டு ஆரம்பமாகிறது.

தமிழ் மொழியில் தமிழரைப் புகழ்ந்து ஆரம்பிக்கும் அவர் திறமை தான் என்னே! வேறு எந்தவொரு மொழியிலாவது அதே மொழியைப் புகழ்ந்து யாராவது பாடியிருக்கிருர்களா? மலையைப் பாடியுள்ளார்கள். மங்கையைப் பாடியுள்ளார்கள் மலர்களைப் பாடியுள்ளார்கள். ஆனுல் தாம் எந்த மொழியில் பாடுகிருர்களோ அந்த மொழியைப் போற்றிப் பாடியதில்லை. இது ஒன்றே பாரதியைப் புதுமைக் கவிஞன் என்று பறைசாற்றும்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்''
என்ருர்.

காசி நகரப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியிலே கேட்பதற்கோர் கருவி
செய்வோம் என்ருர்.

வானையளப்போம், கடல் மண்ணையளப்போம், சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம், என்றெல்லாம் சொன்னுர்.

# அர்த்தம் மாறும் தரிசனங்கள்!

வான்மேகங்களை
முத்தமிட்டு நிற்கும்
உயர் மலைகளே,
இந்த
கவிஞர்கள் உங்களில்
பூரித்து நிற்கும்
இளம் பெண்ணின்
மார்பழகை தரிசிக்கிருர்கள்;
ஆனுல் நாங்களோ,
எங்கள்
ஏழ்மைப் புண்ணின்
அசிங்கமான வீக்கத்தை
உங்களில் காண்கிறேம்.

— பன்விலையூர் குறிஞ்சிநாடன்.

'நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று, அன்று சிவனிடம் விஞத் தொடுத்தார் நக்கீரர். அதே பாணியில்

''நல்லதோர் வீணைசெய்தே — அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி — எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்''

என்றுபாடி அந்த நாளில் இருட்டடிப்பு இருந்துளது என்பதை மறைமுகமாகக் கூறுகிருர்.

''சக்தி பதமே சரணென்று நாம்புகுந்து
பக்தியினுற் பாடிப் பலகாலும்—முக்திநிலை
காண்போம் அதனுற் கவலைப் பிணிதீர்ந்து
பூண்போம் அமரப் பொறி''

என்று ஒரு மெஞ்ஞானியாகவும் தோற்றமளிக்கிருர் இத்தனை வேடங்களுக்கும் பூண்ட மகாகவி பாரதி.

இப்படியே இவர் பாடல்களில் ஆங்காங்கே காணும் கருத்துக்களை சில நூற்றுண்டுகளுக்குப் பின்னர் காணும் மனிதர்கள் இந்தப் பாரதிதான் மண்ணுலகில் நாடு செழிப்புறவும், நங்கையர் படித்தெழவும், அஞ்ஞானம் நீங்கிடவும், விஞ்ஞானம் ஓங்கிடவும் வழி காட்டினுனே என்று எண்ணி பாரதி யார்? என்று தேடி ஆராய்ச்சியில் இறங்கினுலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வாழ்க பாரதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானம்

பிராணுயாமம்

யோகாசன பயிற்சிகளை

அப்பியசித்து


நீடித்த வாழ்வு பெறுங்கள்

# யோகா நிலையம்

வாழைச்சேனை வீதி,

**கல்குடா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமீன்

★

அமரகவி 'நீலாவணன்'

மேளங்கள் முழங்க, தாலி
மேன்மையாய்க் கட்டி, தங்கள்
சூழலில் வாழும் சுற்றம்
சூழ்தர நடந்த தந்த
ஏழ்பிறப் பினிலும் கூடும்
இனிய கல்யாணம், நாற்பத்
தேழாண்டின் இளைஞன் மூர்த்தி,
இளித்தவாய் இலிகி தருக்கு.

அரைசியல் அலுவலாள், ஓர்
ஆண்பனை அனைய செம்மல்!
புருஷனைக் கேட்டுப், பார்த்த
பொடிச்சிகள், 'வேண்டாம்' என்றால்
அருகிலே கொக்காய் நின்ற
அம்மாச்சி மகள் அ னாதை
அருந்ததி தள்ளு வாளோ
அத்தானைத்? துணிந்தே செய்தாள்!

துலாந்தென நிமிர்ந்த பல்லின்
தோகையர், துரைமா ரோடும்
கலந்து வாழ் கின்றார் என்றால்
கள்விற்கும் கடைக்குத் தட்டி
எழுந்ததே யன்ன, பல்லின்
இனியாளாம் அருந் ததிக் கிவ்
விளந்தாரி மூர்த்தி நல்ல
இணங்கிய சோடி யன்றோ!

'கொட்ட ஹே னா'வின் சந்தில்
குகைபோன்ற மாளிகைக்கண்,
மட்டற்ற மகிழ்ச்சி யோடும்,
மறுமாதம், மனைவியைப் போய்ப்
பெட்டிகள் படுக்கை யின்றி,
விமானத்தில் அழைத்து வந்து
பட்டின வாழ்வும் கொஞ்சம்
பயிற்றினான்; பழகிக் கொண்டாள்!

பட்டிக்காட்டாளே, ஈது
பாராளு மன்றம் என்னுங்
கட்டிடம் கோட்டைப் பார்த்துக்
கடவையில் நடவும்; நில்! — இம்
எட்டிவை காலை; காலான்
இடறுதோ? கடவுளே . . . சீ!
கட்டதை இறுக்கி, 'கோல்பேஸ்'
கடற்கரை இதுதான் கண்ணே!

பார்த்தாயா சனத்தை! உந்தப்
பல்லினை இழுத்து மூடு!
வார்த்தையா டுதற்காய், நண்பர்
வருகிறார்; முன்பெல்லாம் . . . நான்
பார்த்தாலும் பார்க்காமற் போம்
பயலெலாம் வருகின்றார்! உன்
வேர்த்திடும் முகத்தை நீவி,
விடுகமுன் தானை தொங்க!

தெகிவளை மிருகக் காட்சி
தேசத்தின் முதுசொம், 'மியூஷியம்'
தகுதிக்கும் மேலாய் உள்ள
தரத்திலே பொழுது போக்கு
பகிரங்க மாக நண்பர்,
பழகிடும் வண்ண மாக,
மிகவுஞ் சந்தோஷ மாக
அருந்ததி — மூர்த்தி வாழ்ந்தார்!

கந்தோரில் கணக்கில், ஏதோ
கவலையீ னத்தால் நேர்ந்த
தொந்தர வினுக்காய் மாதத்
தொகையிலே தொண்ணூற் றெற்டை
தந்தபின் மிகுதியோடும்,
தன்மனை புகுந்த மூர்த்தி
ஐந்தாறு மாதத் துக்குள்,
ஆள்காலி! என்று சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுவா டகைக்கு மட்டும்
வேண்டுமே, எழுபத்தைந்து !
சீட்கா சிருபத் தைந்து
சில்லறைக் கடைக்கு, பால், மீன்
கூட்டுக் காரிக்கு வண்ணான்
கூலிக்கு, கொடுக்க, மேலும்
ஈட்டுக்குக் காப்பை வைத்து
எடுத்தாலும் போதா தென்றான் !

கோப்பியை ஆற்றிக் கொண்டே,
கோபிக்க வேண்டாம் அத்தான்,
காப்பினை ஈடுவைத்தால்
கடற்கரை சினிமா என்று
கூப்பிடல் கூடா தென்னை !
கொண்டு போய் வையும்; என்றாள்
ஆப்பிட வில்லை மூர்த்தி !
அதற்கென்ன நிறுத்தும் என்றான்.

❖ ❖ ❖

அம்மாவின் சீதனத்தை
அள்ளிவந் தவளைப் போல !
சும்மா தா; முகத்தை யென்ன
சுளிக்கிறாய்; சோக்கைப் பார் ! என்
அம்மாவும் இந்த நேரம்
அருகிலே இருப்பா ளாமேல் . . .
செம்மையாய்க் கொடுப்பேன் பேச்சு !
சிவசிவா ! செய்து வைத்தாள் !

'காசெதுந் தேவையானால்
கைம் மாற்றுத் தரலாம்; ஒன்றும்
யோசிக்க வேண்டாம். மேலும் . . .
யோசிக்க எதுவுமில்லை !
பேசிய தெல்லாம் கேட்டேன்
பிழையெண்ண மாட்டீர் ! உங்கள்
நேசத்தின் நிமித்த மாக
நினைத்ததை உரைக்க வந்தேன்'

ஆனந்தன் இளைஞன் ; நல்ல
அழகான பையன், அன்பில்
தேனான குணத்தன் ! என்னைத்
தெரிந்தவன் அதனாற் சொன்னான்.
ஏன்தம்பி நிற்கிறீர் வந்
திரு மிரும்; இந்த மாதம்
தானிந்தக் கரைச்சல் ! என்று
தன்பாட்டில் இளித்தான் மூர்த்தி.

தம்பிக்குச் சிரம மில்லை
யானால், நூற்றெழுபத் தைந்து
நம்பிக்கைக் கடனாய்த் தந்தால்
நல்லது ; நாச மாவார்,
சம்பளப் பணத்தில், மொத்தம்
சரிபாதித் தொகையை வெட்டி
இம்மாதம், என்னைப் போட்டு
இழுத்தடிக் கின்றார் என்றான்.



உலகெங்கும் மஹாகவி பாரதிக்கு நூற்றாண்டு கொண்டாடும் இந்த வேளையில், நமது நாட்டில் வாழ்ந்து தம் கவித்துவத்தால் முத்திரை பொறித்த 'நீலாவணன்' எனும் மகாகவிஞனையும் நினைவு கூர்வது பொருத்தமல்லவா?

'பாடும்மீன்' தந்து, நல்லதோர் 'வழி' காட்டி, 'வேளாண்மை'யும் செய்து மகிழ்ந்த கவிஞரின் 'வடமீன்' எப்படியென்று சுவைத்துப் பார்க்கவேண்டாமா? சுவை கெடாமல் ரசித்துப் புசிக்கவேண்டுமென்பதற்காக அதனை முழுமையாகவே தருகின்றோம். சுவைத்துப்பாருங்கள்.

— ஆசிரியர்.

மண்டையி லடித்துக் கொண்டே
மாற்றினான் காலில் சட்டை.
அண்டைய அறையில் வாழும்
ஆனந்தன் இவற்றை யெல்லாம்
கண்டானே, கண்ட அந்தக்
கணத்திலே நடந்து வந்து
நின்றான் முன் கதவில்; மூர்த்தி
நிமிர்ந் தென்ன வேண்டும்? என்றான்.

தருகிற போது தாரும்.
தவணையாய்த் தந்தாலும் போம் !
வருகிறேன் என்று போய்ப், பின்
வந்திரு நூறு ரூபா
தருகையில், 'உபகாரம்' சீ
தாங்களா விடுங்கள் ! என்றான்.
அருந்ததி ! யென்ற வாறே
அறையுளே புகுந்தான் மூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவோ தலையிற் பாரம்
இறக்கினுற் போல, மூர்த்தி
கண்களை மூடி மண்டூர்க்
கந்தனை வணங்கி, இல்லாள்
முன்னங்கை பற்றி, சின்ன
முகத்தினைக் கரத்துள் ஏந்தி
என்னன்பே! என்ருன். கொஞ்சி
இனியென்ன கவலை யென்ருன்.

கடைக்கணக் கடைத்த பின்னர்
கையிற் பொட்டணமும், சாய்ந்த
நடையோடும் — சீட்டி யோடும்,
நாயகன் மூர்த்தி வந்து
கிடையிலே விழுந்தான்; இல்லாள்
கிட்டப் போய் முகர்ந்து விட்டு
அடிச்சக்கை இதுதான் காசு
அழிகிற வழியோ? என்ருள்.

பறங்கிக் குட் டிகளுக்குப் பின் நீர்
பழகியும் திரிந்த தெல்லாம் . . .
அருந்ததி அறிவேன் அத்தான்!
ஆயினும் பொறுத்துக் கொண்டேன்!
மருந்துக்குந் தொடாத நீங்கள்
மது பானம் பண்ணலாமோ?
விருந்துக்கும் போனீரோ? யார்
வீட்டிலே? சொல்க! என்ருள்.

விரும்பி நீ கேட்ட சேலை,
விலை நாற்பத் தைந்து ரூபா
அருந்ததி உனக்கில்லாமல்
ஆருக்கு! அழகைப் பார் பார்!
விருந்து வை! என்ருன் மூர்த்தி.
வெடுக்கெனப் பறித்துப் 'பார்சல்'
திறந்தனள்: சேலை கண்டாள்.
எடுத்ததை விரித்துப் பார்த்தாள்.

❉ ❉ ❉

பார் கண்ணே, என்று கன்னப்
பழங்களை வருடி, முத்தம்
ஆறேழு கொடுத்தான் மூர்த்தி.
'அழகினைப் பாரேன்! ஐயே!!!
ஆரிந்த ஏழை யான
அருந்ததிப் பெண்ணைக் கட்டிப்
போராடச் சொன்னுர்? போங்கள்!
பொய்க் கோபம் புகன்ருள். பின்னர்.

சேலையைப் பிடித்த செய்தி
சிரிப் பொன்ருல் விளக்கி, உங்கள்
பாலையா மனைவி கூடப்
பார்த்தாசை வைத்த சேலை!
நூலையும் பிடித்துப் பார்த்து,
மார்பிலும் சரித்துப் போட்டு,
வேளையாய் விட்ட துண்ண
வேண்டாமோ! எழுக என்ருள்.

இடியப்பம் தானு? என்ருன்
'இல்லை; ஊர் அரிசிச் சோறு!'
அடியந்தத் தம்பி எங்கே?
ஆனந்தன் நல்ல பிள்ளை!
பிடிவாத மாயும் வந்து
பிறத்தியார்க் குதவு கின்ருன்.
பொடியனும் 'ஹோட்டல்' சோறு
போய்விட்டான் போலும்! போடும்.

நாளைக்கு, இறைச்சி காய்ச்சும்.
ஞாயிற்றுக் கிழமை தானே.
வேளைக்குச் சொல்லிச் சின்ன
விருந் தொன்று வைப்போம் என்ருன்.
நாளைக்குத் தானே, நாக
நந்தினி சினிமா! உங்கள்
மூளைக்குள் ஒன்று மில்லை
முனகினுள் துணைவி. 'ஓம் ஓம்!'

என்ன ஓம்? பிறகு கையில்
இருக்குமா காசு? செய்வோம்!
பின்னொரு முறைபோய் பார்ப்போம்
படத்தினை என்ருள்; ஆகா
பெண்ணென்ருல் ... பெண் நீ! என்ருன்.
பெருமையே எனக்கும். இஃதைத்
தின்னென்று சோற்றை யள்ளித்
திணித்தனன் மனைவி வாயில்

அடுத்த நாள் விசேட மாக
ஆக்கிய விருந்தை, மூர்த்தி
அடுத்தறை நண்பன் அந்த
ஆனந்த னோடும் பேசி,
அடிக்கடி சிரித்த வாறே
அருந்தினுன்; அருந் ததிக்குக்
கடுத்தன கால்கள்; நல்ல
கறியென்னக் களித்த துள்ளம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா போய் வருட மாறு
அதற்குப் பின் இன்றைக்குத்தான்,
உம்மாணை உண்மை; எங்கள்
ஊர்ச்சாப்பா டுண்டேன்! என்றன்
அம்மாவும் இப்படித்தான்,
அருமையாய்ச் சமைப்பாள்! என்ற
நண்பனைப் பார்த்து, மூர்த்தி
நயனத் தால் நன்றி சொன்னான்.

உண்டபின் கதவின் ஓரம்
திண்ணையில் உட் கார்ந்தார்கள்.
துண்ணென்று தும்மி மூக்கைத்
துடைத் தனன் மூர்த்தி; செம்பில்
தண்ணீரைக் கொண்டு, வாசற்
படி, தலை தெளித்தாள் தையல்,
என்னவாம் புதினம் என்று
எடுத்தனன் மூர்த்தி 'பேப்பர்'.

பாயிலே அமர்ந்து தானே
பரிமாறி உண்டாள் பாவை.
போய் வரு கின்றேன் என்று
ஆனந்தன் போன பின்னர்,
தாயினை நினைந்து கொண்டான்.
தனியனாள்; ஹோட்டல் சோறோ,
வாயிலும் வைக்க வொண்ணா!
வம்புக் கா சென்றான் மூர்த்தி.

தம்மொடு பேசிக் கொண்டே
தாம் பூலம் தரித்து நல்ல
சம்பளம் 'இரயிலில் காட்', ஆள்.
சரியான 'அதிக வேலை'
நம்பக்கத் தூரான்; பாவம்
நாமென்ன செய்யலாம்? சீச்!
சம்பளம் எடுத்த அன்றே
சரவைகள் என்றான் மூர்த்தி!

❉ ❉ ❉

என்செய்ய லாகும்? நாமும்
ஏழைகள். உங்கள் பேச்சில்
ஒன்றுமே யில்லை! ஓர் நாள்
ஊருக்குக் கொடுக்க லாம்! ஓர்
நண்பர்க்குத் தினமும் சோறு,
நாம் போடல் எந்த வாறு?
என்றனள் மனைவி நீ யேன்
இரைகிறாய்? என்றான் மூர்த்தி

இரவெலாம் இதையே பற்றி
இருவரும் வாதித் தார்கள்.
கர விலா மனத்தன் மூர்த்தி,
கருணையே வென்ற தீற்றில்.
சரியென்றாள். சந்தோ ஷித்தார்!
சயனித்தார்; எழுந்தார்; காலை,
வரச் சொன்னார் ஆனந்தர்க்கும்
வகை செய்தார் சாப்பாட்டிற்கு.

மாதமொன் றுதிரும்; ஓர்நாள்
மாலையில், வந்த ஆனந்,
ஈது சாப் பாட்டுக் காசு,
என மூர்த்தி கையில் தந்தான்.
பாதகம் இல்லை, நாம் தாம்
பணந்தர உளதே; மேலும்
ஏதுக்குக் கொண்டு வந்தீர்?
இருக்கட்டும்; என்றான் மூர்த்தி.

கைம்மாற்றுக் கடனைப் பற்றி
கவலையுங் களுக்கேன் அண்ணே!
'இம்'... எடும் என்றான் ஆனந்.
இரு தம்பி, என்ற மூர்த்தி
இம்மள வெதற்கு? 'இங்கே...'
இல்லாளை அழைத்தான்... இன்று
சம்பளம் போலும்? என்றாள்.
சங்கடப் பட்டான் பாவம்!

அப்படி யானால் கூட,
ஐம்பதே போதும்; உம்மை
இப்படிச் செலவு வாங்க
என்னதான் சமைத்துப் போட்டோம்!
ஒப்புக்கே சாப்பிட்டீர் நீர்;
ஒரு சதம் அதிகம் வேண்டாம்!
தப்பினான் மூர்த்தி; மீதி
தந்தான் தன் தலைவி கையில்.

வீட்டு வா டகையைத் தாங்கும்!
வேலைசற் றதிக மேனும்
கூட்டான வாழ்வு; தொல்லை
குறைவு தான் இந்த மாதம்!
ஈட்டுக்கு வாங்கிக் கொண்டு
இழுபறிப் பட யார் போவார்!
'சேட்'டினை மாட்டிக் கொண்டே
சிந்தனை செய்தான் மூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறமென்றும் மகிழ்ந்தான் ; சற்றே
ஆறுதல். இரவு வேலை
பொருந்தி ஆனந்தன் போகும்
நாட்களில் பகலில் மட்டும்
அருந்துவான் ; அறையில் தங்கி
ஆறுவான் ; இதழ்கள் பார்ப்பான்
இருந் திருந் தேதுந் தேவை
யெனிலருந் ததியைக் கேட்பான்.

நாளைக்குச், சினிமா பற்றி
நகரத்தில் விநியோகித்த
தாளினைப் படிப்பான் ; கேட்டுத்
தமிழோ ஆங்கிலமோ ? என்று
மூலைக்குள் நின்று கேட்பாள்
மூர்த்தியின் துணைவி. அண்ணர்
வேலைக்கு வந்தால் . . . நீங்கள்
விரும்பினால் போவோம் என்பான் !

மூர்த்தியும், குடும்ப நண்பன்
முறையிலே ஆனந் தோடும்
பார்த்தனன் படங்கள் ; அன்பின்
பரிசுகள் மறுப்பா ருண்டோ ;
'சீர்த்த நல் லுறவு கொண்டால்
செலவிந்த வாறே செய்தல் !'
ஆத்திரப் படுவான் மூர்த்தி !
ஆயினும் மறுத்தா னில்லை !

பேனையை ஓர்நாள் வீட்டில்
பெட்டிமேல் விட்டு விட்டு
போனவன் திரும்பி வந்தான்
புருஷனைக் கண்ட பூவை,
ஆனையைக் கண்டா ளொப்ப
அலமந்து, என்ன அத்தான்
பேனையா ? என்றாள். ஓம் ஓம்
பெட்டிக்கு மேலே என்றான்.

✤ ✤ ✤

அப்பாடா என்று மெல்ல
அடுக்களை புகுந்தாள் ; ஆங்கே
குப்புறப் படுத்துக் கொண்டே
குறி வைக்கும் எலியைப் பூனை,
அப்புறம் போகும் வண்ணம்
அதட்டினாள் ; அதட்டல் கண்ட
செப்புப்பாத் திரங்க ளெல்லாம்
சிரித்தன ! சிணுங்கி நின்றாள் !

அடுக்களை யிருந்த பூனை
ஆனந்தன் அறைக்குள் ஓட
அடுப்பிலே நெருப்புப் பொங்கி
அணைந்தது ; சமைய லாக,
படுத்திருக் கின்ற ஆனந்
பக்கமாய்ச் சென்று, தண்ணீர்
பிடித்துளேன், குளித்துச் சாப்பா
டானபின் தூங்கு மென்றாள்.

உண்ணப் போம் முன்னர், எங்கள்
ஆனந்தன், அறைக்குள் தொங்கும்
கண்ணாடிப் படத்துக்குள் ஓர்
கடபுட சத்தம் கேட்க,
அண்ணார்ந்து பார்த்தான், வெள்ளை
ஆடையில் லாத பல்லி,
பெண்ணொன்றை மருவல் கண்டு
பேசாமற் கதவடைத் தான்.

அருந்ததி, என்றான். ஆகா
அற்புதம் கறிகள் இன்று !
விருந்துதான் படைத்தாய் ! உன்கை
வேகுமா நெருப்பில் ! என்றான்.
திருந்திழை மார்பின் சேலை
திருத்தினாள் ; திறவா வாயில்
பொருந்தினாள் நகையே ! உள்ளம்
பூரித்தாள். புசித்தான் ! போனான் !

பருப்பினைப் பிசைந்தான் ஆனந் ;
பசு நெய்யே வடிதல் கண்டான் !
இறைச்சிக் கூட் டுள் அகப்பை
இட்டிட்டு ஈ ரல் தேடி
உருப்படியாக உண்டான் !
ஒண்ணாத மட்டில் விட்டு
இருப்பிடம் அகன்றான் அந்த
அருந்ததி ஆனந்தித்தாள்.

மூர்த்தி, கந் தோரால் வந்தான் ;
முகம் கறிச் சட்டி யானான்.
ஆத்திரம் கொப்பளிக்க
ஆனந்தன் இந்த வாரம்
ராத்திரி வேலை யாமோ ?
பகலெலாம் இருந்தான் போலும் !
நேர்த்திதான் என்று பல்லை
நெறுநெறு சத்தம் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னோடும் தனிமை யாக
உரையாடல் உண்டு போலும்?
என்னடி விழிக்கிறாய்? தூ . . !
எத்தனை நாட்களாக?
என்னிலே பிழைதான்! பேயன்!
இனியவன் இந்த வீட்டில்
உண்ணவும் கால்வைத் தானேல்
ஒரேவெட்டு! கவனம்! என்றான்.

தேவடி யாளே உன்னைத்
தீர்க்கிறேன் என்றான். நின்றோர்
காவடி யாட்டம் போட்டான்!
கண்களை உருட்டிக் கொண்டான்.
போவடி யுள்ளே யென்றான்!
புலம்பினான்; போட்டான் நாலு!
'கேவலம்' என்றாள், கேட்டுக்
கீழ்சாதி நாயே! என்றான்.

அத்தான், ஏன் என்னை வீணாய்
அடிக்கிறீர்? என்றாள். வாயைப்
பொத்தடி! என்று மூர்த்தி
புறப்பட்டான் ஹோல் பே சிற்கு
பத்தரை மணிக்கு வந்தான்
பலமான குரலில், இல்லாள்
சத்தத்தை அறிந்து காதை
சரியாகப் பிடித்துக் கேட்டான்.

வானந்தான் இடிந்து வந்தென்
வாழ்விலே விழுந்த தின்று!
ஆனந்தா! இந்த வீட்டில்
அடிவைக்க வேண்டாம்; போய்வா!
ஏனென்ன நடந்த? தென்றான்;
எனக் கொன்றுந் தெரியா தென்றாள்!
மோனத்தில் நிமிட மொன்று
முடிந்தது! முறைத்துப் பார்த்தான்!

போகலாம் வெளியே என்று
பொருமினான்! செருமிக் கொண்டு,
சாகலாம் நாயே! என்று
சலித்த வா றுள்ளே வந்த
வேகத்தில், மூர்த்தி, காலை
விருந்தையில் இடறி வீழ்ந்தான்!
போகிறான் ஆனந் 'ஹோட்டல்'
புதுக் கணக் காரம்பிக்க!

நீலவான் மீதில் நின்ற, நில்வெங்கோ மறைய, விண்மீன்
கோலத்தின் நடுவே, யூன்றிக் குறிப்பாகப் பார்த்தான் மூர்த்தி.
பூலோக மெங்கும் கற்பைப் புதுப்பிக்கும் வடமீன் நங்கை,
ஆலால முண்ட கண்டன் அணைப்பிலே கிடந்தாள். வாழ்க!

முற்றும். (யாவும் கற்பனை)

---

## ஆவியுலகில் ...

**காந்திஜி :** தம்பி! வெளிப்படையாக் கேக்கிறேன்னு கோபிக்காதே இந்த விழாக்களெல்லாம் நமக்கு வேண்டியதுதானா? நாங்க சொன்னதுக்காக எங்களைப் பாராட்டுறாங்களே தவிர, எங்க சொல்லுக்கு மதிப்புக் குடுக்கிறாங்களான்னு கேட்டேன்....?

**பாரதி :** ஐயா, பெரியவரே! அதுபற்றித்தான் நானும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.... இங்கிருந்தே ஏதாவது 'கிளிக் கண்ணி' அனுப்பினா ஏற்றுக்குவாங்களோன்னு சந்தேகமாயிருக்கே?

மட்டக்களப்பு. — ஸந்திரிகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ச் சொல் வீரர்கள்

● அனுராதா பாக்கியராஜன்

"ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்மம் இத் தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே – அன்றி
வேறு குலத்தினராயினும் ஒன்றே!"

— பாரதி.

தேவரஞ்சிதாவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. காலையில் விடிந்ததுமுதல், இரவு படுக்கைக்குப் போகும் வரை வீட்டில் அவளைப் பற்றிய கதைதான் பெரிதாய் இருந்தது. அப்பா, அம்மா, சகோதரங்களே இப்படி என்றால் மற்றவர்களைக் கேட்கவா வேண்டும்?

வெளியே சோவென்று ஒரு பாட்டம் மழை அடித்து ஓய்ந்தது. கண்ணாடி சன்னல்களையெல்லாம் லேசாகத் திறந்துவிட்டு வானத்தையே வெறித்து நோக்கினாள் அவள். எல்லாமே அழகாகத்தான் இருந்தன. திட்டுத்திட்டாக பஞ்சு அப்பியதுபோல் நீலமாய்க் கிடந்த வானம், நிலத்தில் முளைத்திருந்த புற்கள், செழித்து வளர்ந்திருந்த பெரிய மரங்கள், புதிது புதிதாய்க் குடைக்காளான்கள் போல் முளைத்திருந்த ஓலைக் குடிசைகள், கிராமத்தின் தரத்திற்கமைந்த கல்வீடுகள், பரவாயில்லை எல்லாமே நன்றாகத்தான் இருக்கின்றன. தேவரஞ்சிதாவின் மனக்குளிர்ச்சி நெடுநேரம் நிலைக்கவில்லை. 'இந்த மனிதர்களின் மனம் மட்டும் நன்றாக இல்லையே' - தனக்குள்ளேயே குமைந்து கொண்டாள் அவள்.

இத்தனைக்கும் அவள் செய்த குற்றம் என்ன? கொலையா செய்துவிட்டாள்? கண்களிலிருந்து பொலபொலவென்று வடிந்த கண்ணீரை சேலைத்தலைப்பால் துடைத்தவள், குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''இத்தனை வருஷமாய்க் கட்டிக் காத்த மானத்தையெல்லாம் காத்தில பறக்க விட்டிட்டாளடி வைதேகி. இவள் நான் பெத்த பெண்ணல்லடி, தடிக்கழுதை. இல்லேன்னா என்னை ஒரு வார்த்தை கேக்காம அவள் இப்படி நடந்திருப்பாளா ஊம்! என்ன தைரியம் அவளுக்கு? என்னோட காசையெல்லாம் செலவளிச்சு அவளை எம். ஏ.வரையும் படிப்பிச்சேனே... அது தான்டி நான் செய்த பெரிய தப்பு'' - இப்படி எதை எதையோ எல்லாம் சொல்லி வாய் ஓயாமல் தொணதொணத்துக் கொண்டிருந்தார் அப்பா.

''சீ! என்ன வெட்கக்கேடு. மார்க்கெற்றில் சாமான் வாங்கவா முடிகிறது? உங்க தங்கச்சியோட விஷயத்தைப் பற்றித்தான் எல்லோரும் கேட்கிறாங்க... எனக்கென்றால் சேலை உரிந்தமாதிரி வெட்கமாய்ப் போயிற்று.'' உள்ளே மரகதம் அண்ணி, அண்ணாவோடு பேசிய பெரிய வார்த்தைகள் தேவரஞ்சிதத்தின் நெஞ்சை சுட்டுப் பொசுக்கின.

பக்கத்து வீட்டு மங்களம் மாமியின் கணவர் — அந்த ஊர்க்கோவில் வண்ணக்கர், ''வேதநாயகத்தின்ர பெட்டை தேவரஞ்சிதா செய்த வேலையைக் கேள்விப்பட்டியே மங்களம்? கேள்விப்பட்ட உடனே நான் எண்டால் தூக்குப் போட்டுச் செத்திருப்பன. சீ! மானங்கெட்ட பிறவியள்...'' தன்பாட்டிற்கு துப்பிக்கழித்த சத்தமும் தேவரஞ்சிதாவைத் தாக்காமல் விடவில்லை.

எல்லாவற்றையுமே சகித்துக்கொண்டாள் அவள். மனதைச் சமாதானப்படுத்திக் கொள்ளும்போதெல்லாம்..., பாலமூர்த்திதான் அவள் கண் முன்னே நின்றான்.

அவன் ஒருத்தனுக்காகவே அவள் இந்தச் சமூகத்தைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்கிறாள். அவனுடைய நினைவுகள் எல்லாம் அவளுக்கு இதமாக இருந்தது. அவளுடைய கனவுகளில் எல்லாம் அவனே வந்தான். இரவு நெடுநேரமாகிவிட்டதால் அவளுக்குப் படுக்கவேண்டும்போல் இருந்தது. மனம்மட்டும் தவியாய்த் தவித்தது. மீண்டும் பாலமூர்த்தியைக் கண்களுக்குள் சிறைவைத்துக்கொண்டு படுக்கையில் சரிந்தாள் அவள்.

* * *

பாலமூர்த்திக்குப் பெற்றோர் சின்ன வயதிலேயே போய்விட்டதில் — அவன் மிஷனில் படித்து ஆளாகி விட்டான்... கஷ்டத்தை அனுபவித்ததிலோ என்னவோ, அவன் சரியான சாதுவாகவே இருந்தான். எம். ஏ. பட்டப் படிப்பில் சித்தியடைந்த அவனை கொழும்பு பல்கலைக் கழகத்தில்தான் தேவரஞ்சிதா முதன்முதலில் கண்டுகொண்டாள்.

அந்த அழகான முகம், நல்ல குணம் எல்லாமே அவளுக்குப் பிடித்துப்போயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப்போலவே அவளும் ஒரு பேராசிரியை. அதனால் இருவரும் இயற்கையாகவே சந்தித்துக்கொண்டனர்.

தேவரஞ்சிதாவின் குடும்பத்திலே பிரச்சினைகள் அதிகமாயிருந்தன. அப்பாவுக்கு இரண்டாவது பெண்ணாகப் பிறந்தாலும், சித்தி அவளை வதைத்துத்தான் வளர்த்துவிட்டாள். குடிகாரத் தந்தையும் பயந்தாங்கொள்ளி அண்ணனும் எப்போதுமே அவளுக்கு எதிரிகள்போலத்தான்.

அதனால் குடும்பத்தில் முழுமையான பாசத்தை அவளால் வழங்கமுடியவில்லை.

பாலமூர்த்திக்கும் தேவரஞ்சிதாவே மனதில் நின்றாள்.

அவன் அடிக்கடி கேட்பான், ''தேவா இந்த உலகத்தில் இருக்கிற போலிவேஷத்தை முதல்ல கழட்டி எறியவேணும். நீர் என்ன சொல்லுறீர்?'' அவளது முகத்தை ஆசையோடு பார்த்தபடியே பதிலை எதிர்பார்ப்பான் அவன். தேவரஞ்சிதாவுக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டுவரும். ஒரு நிமிடம் வானத்தைப் பார்த்துவிட்டு, ''போலித்தனத்தைக் கழட்டி எறியவேணும் அவ்வளவுதானே பாலு? தாராளமாக ஒத்துழைப்பேன் மை டியர்.'' அவளுடைய அந்தப் பதிலில் அவன் அப்படியே மகிழ்ச்சியால் கரைந்துபோவான்.

''இன்னொரு தடவை, சாதி சமயத்தைப்பற்றி நீர் ஆயுள்வரைக்கும் என்ன முடிவெடுப்பீர் ரஞ்சி? எனக்கென்றால் எல்லாம் மனுஷனுக்கு மனுஷன் வைத்த மகுடம் என்றுதான் நினைக்க முடிகிறது'' என்பான் அவன்.

அப்போதெல்லாம் சில நிமிடங்கள் பேசாமல் இருப்பாள் அவள். அவனுடைய கேள்வியின் உள்ளார்த்தமும் எதிர்பார்ப்புங்கூட அவளுக்கு புரிந்துவிடும். இன்னமும் அவளுக்கு ஞாபகம் இருக்கிறது. சின்ன வயதிலே ஸ்கூலுக்குப் போய்வரும்போதெல்லாம்,

''சாதிகள் இல்லையடி
பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்ச்சி
சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி
கல்வி — அன்பு
நிறைய உடையவர்கள்
மேலோர்''

என்ற பாரதியாரின் பாடலை அப்பா எத்தனை தரம் அவளுக்குப் படித்துப் படித்துச் சொல்லித் தந்திருக்கிறார்.

அது மட்டுமா?

''ஜாதி மதங்களைப்
பாரோம் — உயர்
ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின்
வேதியராயினும்
ஒன்றே — அன்றி
வேறு குலத்தினராயினும்
ஒன்றே''

என்று பாரதியாரின் பாட்டை மேற்கோள் காட்டி, அவளுடைய அப்பா எத்தனை மேடைகளில் எத்தனை தரம் அடித்தடித்துப் பேசியிருப்பார். அப்படிப்பட்ட ஒரு தந்தைக்குப் பிறந்தவள், குலத்தாழ்ச்சியையெல்லாம் எப்படி ஆதரிப்பாள்? ''சாதி சமயத்தையெல்லாம் சும்மா போர்வையென்று சொல்லுங்கள் பாலு.'' ஆணித்தரமாக அன்போடு அவள் சொல்லும் வார்த்தைக்கெல்லாம் ஆயிரம் தரம் அவளை முத்தமிட வேண்டும் போல் மனசு துடிக்கும் அவனுக்கு.

எப்படியோ ஒரு வருஷம் அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்தாயிற்று. தேவரஞ்சிதா அந்தமுறை கோடை விடுமுறைக்காக ஊருக்குப் போக வேண்டியிருந்தது. அதை நினைக்கும்போதுதான் பாலமூர்த்திக்குத் துயரம் தாளவில்லை. ''என்னுடை பிரிவு உங்களை வருத்துகிறதா பாலு?'' கண்களில் நீர் பனிக்க இதமாக வந்த அவளது வார்த்தைகளில் பாலமூர்த்தி உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டான்.

தேவரஞ்சிதாவின் இதயம் கனத்தது. இரண்டாவது பெட்டியில் ஒரு கோணர் சீற்றில் அவளை இருத்திவிட்ட நிம்மதியில் அவளுக்குப் பக்கத்தில் வந்து ஆசையோடு உட்கார்ந்துகொண்டான் அவன்.

றெயில் புறப்பட பதினைந்து நிமிஷந்தான் பாக்கி இருந்தது. அதற்குள் எவ்வளவோ கதைக்கவேண்டும் போல் இருவருமே அவசரப்பட்டார்கள்.

''போனதும் லெட்டர் போட மறக்காத... ஆ... இன்னுமொன்று உங்க அப்பாக் கிட்ட நம்மோட விஷயத்தைக் கேட்டுப்பார்'' — பாலமூர்த்திதான் முதலில் அமைதியை குலைத்துக் கேட்டான். சரியென்று தலை

## தூக்குக் கயிறு

முற்போக்கு பேசி,
பிற்போக்கில் வாழும்
தற்கால
மனிதர்கள் மத்தியில்...
தட்சணை எனும் பெயரில்,
வரதட்சணை கேட்கும்
தலையாளிகள் மத்தியில்...
தாலி வேண்டி, தினம்
தத்தளித்து
வாழா வெட்டியாய்,
வதங்கிய உடலுடன்,
சுடு மூச்சினை
சுமையாக்கிக் கொண்டு...
தூக்க மாத்திரைகளில்
ஏக்கம் தணிக்க
துணிந்த
துரதிஸ்ர சாவிகட்கு...
இறைவன், தன்,
இயலாமையை மறைக்க
அளித்த
தாலிக் கயிறு!

— எம். சிந்நுஜா
கல்முனை-2.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி யார்?

பாரதி, . . . யாரென்று ஆய்வு செய்தேன்!
    பதில்கண்டேன்! பாருக்கு ரதியாய் ஆனான்
காரமதாய் கனிவாகக் கவிதை தந்தோன்!
    காசினியில் புகழ்பூத்த கவிஞன் ஆனான்!
நேரமெல்லாம் காசினிக்கே தன்னை ஈய்ந்தோன்!
    நேரிழையாள் அடிமைநிலை அகலச் செய்தோன்!
சாரல்நதி, மலர்ச்சோலை, மக்கள் வாழ்க்கை
    சகலதையும் கவிதையிலே திரட்டித்தந்தான்!

பாமரரும் படித்திடவே பாக்கள் செய்தோன்!
    பணக்காரன்; ஏழையென்ற பேதம் போக்கி
ஆமெல்லா மக்களுமே ஒன்று என்ற
    அழகான தத்துவத்தை அளித்த வேந்தன்!
பூமணக்கும் சோலையிலே, சமூகந்தன்னில்
    புகழ்மணக்கும்! 'பாரதியின் கவிதை' யென்னும்
பாமணக்க வைத்திட்டான்! பலரும்போற்றும்
    பான்மையினால் பாரிலவன் உயர்ந்தே நின்றான்!

பாட்டுக்கு ஒருபுலவன் இவன்தான்! பாரில்,
    பாவலர்கள் எல்லோரும் இவரின் சீடர்!
சாட்டுக்குக் கவிஞரென்று சிலபேரிங்கு
    சபைமீது தமிழ்தமிழாய் முழங்குகின்றார்.
வீட்டுக்குள் இருந்தவர்கள் விழித்துக்கொண்டு,
    வீரமுள்ள நெஞ்சரென வெளியே வந்தார்!
நாட்டுக்காய் உழைத்தபெருங் கவிஞரென்றால்,
    நானிலத்தில் பாரதிதான்! வேறாருண்டு?

— அ. கௌரிதாசன்

---

யாட்டியவள், "எதுக்கும் நீங்க ஒரு தடவை வாங்களேன் பாலு" என்று சொல்லும்போதே விசில் கேட்டது.

அவசர அவசரமாகக் கீழே இறங்கியவன், மென்மையான அவளுடைய கைகளைப் பிரித்து லேசான ஒரு முத்தத்தைப் பதித்து விடை பெற்றுக்கொண்டான்.

வண்டி புறப்பட்டு வெகு நேரம்வரை அந்த இன்ப உணர்ச்சியிலேயே திளைத்துப் போனாள் தேவரஞ்சிதா.

"மறுநாள் வீட்டுக்குப் போனதும் அப்பா சீறிக்கொண்டிருந்தார். "என்னடி, எம். ஏ. படித்த திமிரில் உன் விருப்பப்படியெல்லாம் நடக்கலாம் எண்டு நினைச்சிட்டியா? நடக்காதுடி. இந்த உடம்பில உயிர் இருக்கிற வரைக்கும் உன்னோடை விருப்பத்தில நியாயம் தேவையில்லடி..."

வீடே அதிரும்படி அவர் 'தாந்தீம்' என கத்தியதில் தேவரஞ்சிதா கலங்கித்தான் போனாள்.

"வண்ணக்கர் மாமா சொன்னாரே... இவள் செய்திருப்பாளப்பா... யாரோ ஒரு கீழ்சாதிப் பையனோடை உறவுகொண்டாடினாளாமே... நாங்கெல்லாம் என்ன குருடர்கள் என்று நினைச்சிட்டாளோ என்னமோ?" அப்பாவைத் தொடர்ந்து அண்ணா தன் பங்கைக் கேட்க ஆரம்பித்து விட்டிருந்தான்.

இப்போது அவளுக்கு எல்லாமே புரிந்துவிட்டது. வண்ணக்கர் மாமா இரவு வண்டியில் வந்திருப்பார். பாலமூர்த்தியையும் அவளையும் கண்டு வந்து அப்பாவிடம் வத்தி வைச்சிருப்பார். 'எல்லாம் நல்லதுக்குத்தான். எப்படியும் அவர்களுக்குத் தெரியத்தானே வேண்டும்' எனத் தன்னைத்தானே சமாதானப் படுத்தியவள் பேசாமல் இருந்தாள்.

* * *

ஒரு நாளா? இரண்டு நாளா? அப்பாடா, ஒரு மாதமாகியும் திரும்பத் திரும்ப எதை எதையோ எல்லாம் சொல்லி என்னமாய்க் கத்துகிறார்கள்?

அன்றைக்கு ஒரு ஞாயிற்றுக் கிழமை. திடீரென்று பாலமூர்த்தி அவர்கள் வீட்டுக்குப் பிரசன்னமாவான் என்று தேவரஞ்சிதாவே நம்பமுடியாமல் திகைத்துப் போனாள்.

பாலமூர்த்தி நேரடியாக விஷயத்துக்கு வந்துவிட்டான்.

கூடத்திலிருந்த அப்பாவும் அண்ணாவும் மரியாதை கெட்ட மனிதர்களாக மாறி விட்டதைப் பார்த்தபோது தேவரஞ்சிதாவுக்கு 'ஓ!' என்று கத்தவேண்டும் போல் மனசு துடித்தது.

அப்பா சொல்லிவிட்டார், "அடேய் கீழ்சாதிப்பயலே... உன்னோடை குலம் என்னடா? கோத்திரம் என்னடா? எத்தனை தைரியம் இருந்தால் என் வீட்டுப் படியிலே நின்று பொம்பிளை கேட்பாய்? காவாலிப் பயலே." அப்பா கேட்டபோது அவரது பண்பு கெட்ட வார்த்தைகளைக்

கேட்டு தேவரஞ்சிதா ஆத்திரத்தில் துடித்துப்போனாள்.

''அப்பா நீங்களும் ஒரு மனுஷனா? ஒரு வாத்தியாரா? சாராயத்தை மண்டிவிட்டு... கண் மண் தெரியாமக் கத்திறியளே... சீ... வெட்கமாயில்லே?''

சொல்லி முடிக்கு முன்னேயே தேவரஞ்சிதாவை அறைந்து தள்ளிவிட்டு, ''போடா வெளியே...'' என்று பாலமூர்த்தியை வார்த்தைகளால் விரட்டினார் அவர்.

பாலமூர்த்தி போய்விட்டான். தேவரஞ்சிதாவின் உள்ளம் சாகாமல் செத்தது. அவள் தீர்மானித்து விட்டாள். இனி இந்த வீட்டில் ஒரு நிமிஷமும் தங்கக்கூடாது என்று. ஆனாலும் அது சுலபமாகவில்லை.

வெகு நாட்களுக்குப் பின் அப்பா அவளிடம் சாதுவாகப் பேசத் தொடங்கினார். ''இந்தாம்மா, தேவரஞ்சிதா... உன்னோட மனசைத் துடைச்சுக்கோம்மா... நம்ப சின்னக் கடை முதலாளி உன்னைப் பெண்கேட்டுக்கிட்டே வர்ராரு. வாற மாசம் உன்னைக் கல்யாணம்பண்ணிட்டு வெளிநாடு செல்லப்போறாராம்... நீ ஓம்படம்மா. நான் சம்மதிச்சிட்டன். சரியா?'' அரை வெறியில்தான் அப்பா அவளைக் கேட்டுத் துளைத்தார்.

'சின்னக் கடை முதலாளியோட காசும் சொத்தும் அவரோட மனசை மயக்கிப் போட்டுது. அது தெளியிறதுக்குள்ள இங்கிருந்து புறப்பட்டாக வேண்டும்' — மனதுக்குள் நினைத்துக்கொண்டவள், ''சரியப்பா... சின்னக் கடை முதலாளிக்கு நான் இரண்டாந் தாரம் ஆகணும் அவ்வளவுதானே...? நீங்க ஒண்ணுமே யோசிக்காதீங்க... எல்லாம் சரிவரும்.'' வேணுமென்றே சொல்லியவள் விரக்தியோடு சிரித்தாள்.

அப்பா சந்தோசத்தோடு போய்விட்டார்.

தேவரஞ்சிதா இப்போது பாலமூர்த்தியை நினைத்துக் கொண்டாள். பாலமூர்த்தி ஏழைதான். ஆனால் கீழ்சாதிக் காரன் என்று அவனுக்கு மகுடம் சூட்டி வைத்திருக்கிறார் அப்பா... பாலமூர்த்தியின் முன்னோர் செய்த வேலையைப் பார்த்து, அப்பா அவனுக்கு அம்பட்டவன் என்று சாதிப் பெயரைக் குறித்துவிட்டார். என்ன உலகம் இது? இடி இடியென்று சிரிக்கவேண்டும் போல் இருந்தது அவளுக்கு. மண்டையை அப்படியே எங்காவது மோதிக்கொண்டு அழவேண்டும்போல் எரிச்சலாய் இருந்தது. இன்னும் என்னென்னவெல்லாமோ மனசுக்குள் செய்தது.

இந்த முப்பத்தைந்து வருஷமாய், அவளைத் தேடி வந்த வரன்களையெல்லாம் சாதியில் குறைஞ்சவன், சமயத்தில் பொருந்தாதவன், குலங்கோத்திரம் சரிப்படாது அப்படி இப்படியென்றெல்லாம் சொல்லிவிட்டு, கூடிய சீக்கிரம் அப்பா அவளுக்கு கலியாணம் செய்துவைக்கப் போகிறாராம். அதுவும் இரண்டாந் தாரமாய்... ஒரு முக்கால் கிழவனை, பெண்ணாசைக் காரனை... ஒரு பெண்ணைப் பிறந்துவிட்டதற்காக சோழக் கொல்லை பொம்மை மாதிரி... இவங்க சொல்றதை எல்லாம் செய்தேயாகணுமா? முடியாது; அது அவளால் முடியவே முடியாது.

காதல் போனால் சாதல்... அதை விட்டுப்போட்டு அப்பாவோட சாராய ஆசைக்காக, சாதி சமய வெறிக்காக, ஒரு மூன்றும் பட்ச மனிதனையா அவள் மணப்பாள்? அவளுக்குத் தெரியும். அவளுடைய சம்பளம் கைமாறிவிடும். அதனால் அப்பாதான் கஷ்டப்பட நேரிடும் — அதனாலேதான் பெரிய சாதனையைச் செய்துவிட்டவர் போல கலியாணம் செய்து கொடுக்கப்போகிறாராம்.

அப்பா மட்டுமா அப்படி? அண்ணாகூட அடிக்கடி சொல்லுவான் — 'தேவரஞ்சிதா எவனை விரும்பினாலும்சரி. அவளோட விருப்பம் எதுவோ அதுதான் எனக்கு முக்கியம்' என்று வாய்ச் சொல்லளவில் வீரம் பேசுவான். ஆனால் இப்போதெல்லாம் அண்ணாவையே காணமுடியல்ல. அவனையும் போலிக் கௌரவங்கள் ஓட ஓட விரட்டுகின்றன போலும்.

மனதைக் கட்டுப்படுத்தியவள், மெதுவாக எழுந்து சென்று, எடுத்துக்கொண்டு புறப்பட வேண்டியதையெல்லாம் அடுக்கிவிட்டாள். எப்படியோ அந்த விஷயம் வீட்டில் தெரிந்தபோதுதான் அவர்கள் எல்லோரும் இப்படி ஓயாமல் கத்தித் தொலைக்கின்றனர். இனி எவர் எதைச் சொன்னாலும் சரி. அவள் நினைத்ததை நினைத்தபடி சாதிக்கத்தான் போகிறாள்.

இப்போது வெளியே நிலவுமட்டும் நியோன் விளக்காக ஏகப்பட்ட குளிர்ச்சியை பூமிக்கு இறைத்துக்கொண்டிருந்தது. அவளுடைய வாழ்வும் இனி அப்படித்தான் ஒளிரப்போகிறதோ...? ✽

---

## பாரதி

பாரதியாம் பாரதி
பாருக்கெல்லாம் மாகவி
பா ரதத்தில் ஏறிவந்து
பாட்டுத் தந்த பாரதி!
(பாரதி)

பாப்பாப் பாட்டுப் பாடியே
பாலர் நம்மை ஈர்த்தவர்
பாவலர்கள் அவையிலே
பாரதியாய் நின்றவர்!
(பாரதி)

சாதி மத பேதங்களை
சாடி நின்று வென்றவர்
தான் பிறந்த நாட்டினை
வான் புகழ வைத்தவர்
(பாரதி)

— ம. இராசமணி

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமான போராட்டங்கள்

குறுநாவல்

● ச. முருகானந்தன்

— 2 —

தை மாதப் பனிக் குளிரில் முடங்கிப்போய் படுத்திருந்தாள் வில்லி. பொல பொல என்று பொழுது விடிந்துகொண்டிருந்தது கூடத் தெரியவில்லை அவளுக்கு.

திடீரென்று கண் விழித்துக்கொண்டவள், 'அட அதுக்கிடையில விடிஞ்சிரிச்சா?' என்று வியந்தபடி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். பிள்ளைகள் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தனர்.

வில்லி கடற்கரையை நோக்கிப் புறப்பட்டாள். இருள் முற்றாக விலகாத அந்த அதிகாலை நேரத்திலேயே சம்மாட்டிக்களும் தொழிலாளர்களும் வியாபாரிகளும் மீன் பிடித் துறை அருகே கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்தனர்.

நீர்க்காக்கைகளும் நாரைகளும் கொக்குகளும் ஒலி எழுப்பியபடி பறந்துகொண்டிருந்தன. அவை எழுப்பும் ஒலி, கடலலையின் பேரிரைச்சலையும் மீறிக்கொண்டு கேட்டது.

கீழ்வானம் மெல்ல மெல்ல வெளித்துக்கொண்டிருந்தது. இரவு மீன் பிடிக்கச் சென்ற வள்ளங்கள் கரைக்கு வரத் தொடங்கிவிட்டன. மதுர வெளிக் கிராம மக்களில் பெரும்பாலோர் மீன்பிடித் தொழிலையே நம்பி ஜீவனம் நடாத்திக்கொண்டிருந்ததால் அங்கே இந்த அதிகாலையில் முழுக் கிராமமுமே திரண்டிருந்தது எனலாம்.

எல்லா இரைச்சலையும் மீறிக்கொண்டு ஏலம் கூறுபவர்களின் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

''ஐம்பது ரூபா...''

''அறுபது...''

''எழுபது...''

''யாரு எழுபது... யாரு எழுபது ரூபா... ம்... எழுபது ரூபா மூணுந்தரம்...

"எழுபத்தியைந்து ரூபா" என்றான் கிட்டினன்.

''எழுபத்தியைந்து ரூபா இரண்டாந்தரம்... இப்ராகீம் காக்கா... நீங்க கேட்கலியா...?''

''கொஞ்சம் உசக்கவா இரிக்கி... சரி போவட்டும்... எண்பது...''

''எண்பது... எண்பது... எண்பது ரூபா மூணும் தரம். ம்... ஒத்தரும் கேக்கலியா ..? இப்ராகீம் காக்காவுக்குத்தான் வாசி... எடுங்க காக்கா...'' கண்மணி ஏலத்தை முடித்தாள்.

இத்தனை சலசலப்புக்கு மிடையில் கடலை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள் வில்லி. அவளருகே நின்று மீன்களைத் தரம் பிரித்துக்கொண்டிருந்த கிளியம்மாவும் அடிக்கடி கடலைப் பார்த்தாள். கண்மணியும் அப்படித்தான்.

பரந்து கிடக்கும் நீலக் கடலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்னும் சில வள்ளங்கள் கரையை நோக்கி வந்துகொண்டிருந்தன. அவற்றில் ஒன்றில்தான் வில்லியின் கணவன் பெர்ணண்டோவும் இருப்பான். ஒவ்வொரு வள்ளமும் கரையை நெருங்க நெருங்க அதில்தான் அவன் இருப்பதாக வில்லி எண்ணிக் கொள்வாள். அந்த நம்பிக்கையில் சுள் என்று எரிக்கத் தொடங்கிவிட்ட காலை இளம் வெயிலையும் பொருட்படுத்தாமல் வள்ளங்கள் வருவதையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

கருங்கடல் தொடர்ச்சியான பேரலைகளை வீசியெறிந்துகொண்டிருந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர்தான் வில்லி பெர்ணண்டோவுடன் கூடிக்கொண்டு ஓடிவந்தாள். அதற்கிடையில் நாலு குழந்தைகள்! கூடவே கணவனின் குடிப் பழக்கம்; இதனால் தினமும் அரை வயிறும் கால் வயிறும் தான்! எனினும் அவர்களிடையே அன்பு அடிதடிகளுக்குமிடையில் பின்னிப் பிணைந்துதான் இருந்தது.

சாமித்தம்பி, வீரசொக்கன் ஆகியோருடன் பெர்ணண்டோவும் வீரமுத்துச் சம்மாட்டியாரின் வள்ளம் ஒன்றில்தான் தொழில் புரிந்தனர்.

கணவன்மார் கடலுக்குப் போய்விட்டால் மனைவிமார் மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு நிற்பதுதான் வழக்கம். அதிலும் இன்று தாமதமாகி விட்டதால் வில்லியின் மனவேதனை அதிகமாக இருந்தது.

ஏனைய வள்ளங்கள் எல்லாம் வந்து மீன்களும் விற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைக்கு வந்துவிட்டதால், வீரமுத்துச் சம்மாட்டியும் நிலைகொள்ளாமல் தவித்தார். எங்கே தனது வள்ளம் கடலோடு போய்விட்டதோ என்ற ஐயமும் அவர் மனதில் எழுந்தது.

கரையோரத்தில் மீன் விற்பனை இன்னமும் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. வலைப்பாட்டிலிருந்த இராலை அள்ளி சாக்குகளில் கொட்டித் தரம் பிரித்துக்கொண்டிருந்த கிளியம்மாவும் கண்மணியும், சாமித்தம்பியையும் வீரசொக்கனையும் நினைத்து அடிக்கடி கடல் பக்கம் பார்வையை மேயவிட்டனர்.

பேச்சிமுத்துவும் அந்தோனியும் ஐஸ் கட்டிகளை உடைத்து மீன்களுடன் கலந்து பெட்டிகளில் அடைத்துக் கொண்டிருந்தனர்.

கரையோரப் பகுதிகளில் வலைகளை விரித்துக் காயப் போட்டுவிட்டு, தொழிலாளர்கள் கூலியையும் சில மீன்களையும் சம்மாட்டிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு தமது குடிசைகளைநோக்கி நடந்தனர்.

வேலையை முடித்துக் கொண்டு குடிசையைநோக்கி நடந்த அந்தோனியிடம் வீரமுத்துச் சம்மாட்டி கேட்டார், ''எலே அவுகளைக் கண்டியா?''

''காணல... ஆனா பயப்படும்படி ஒண்ணுமில்லை. கடல் செத்துப்போய்த்தான் இருந்தது... வருவாக...'' என்ற அந்தோனியின் பதில் வில்லிக்கும் பாலை வார்த்தது. கலங்கிய கண்களுடன் நின்றிருந்த அவளைக் கண்ட அந்தோனி, ''பிள்ளை... பயப்படாத... நான் சொல்லுறேன்... பயப்படவேணும்... நம்பளை ஆண்டவன் கடல்மேல் புழைக்கவைச்சிரிக்கான். கண்ணீரைவிட்டுனு இருந்தா சரியாய்ப் போயிடுமா...? எதுக்கும் ஆண்டவன் பார்த்தும்பான். . மாதாவை வேண்டிக்கோ...'' என்றபடி மடியிலிருந்த சுருட்டை எடுத்துப் பற்றவைத்தான். காற்று துணைபுரியாததால், ''நாசங்கட்டின காத்து..'' என்று சபித்தபடியே மீண்டும் கைகளால் பொத்தியபடி தீக்குச்சியைக் கிழித்து சுருட்டைப் பற்றவைத்த அந்தோனி ''வில்லி'' என்று உற்சாகமாகக் கூறினான். ''அதோ பாரு... வள்ளம் ஒண்ணு வருது... அவுக வள்ளம்தான் புள்ளை...''

அந்தோனி காட்டிய திசையில் தூரத்தே ஒரு வள்ளம் வந்துகொண்டிருப்பதைக் கண்டதும் வாடிப்போயிருந்த வதனங்கள் மலர்ந்தன. வீரமுத்துச் சம்மாட்டியும் வள்ளத்தை உன்னிப்பாகப் பார்த்துவிட்டு அது தனது வள்ளம்தான் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டார். வேகமாகக் கரையைநோக்கி வந்துகொண்டிருந்த வள்ளத்தில் துடுப்பு வலித்துக்கொண்டிருந்த வீரசொக்கனைக் கண்டதும் கண்மணி பூரித்துப் போனாள். கிளியம்மாவுக்கும் உடலெங்கும் புல்லரித்தது. மேரி மாதாவை மறுபடி வேண்டிச் சிலுவைக் குறியிட்டு நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள் வில்லி.

வள்ளம் கரையை அண்மித்ததும் சாமித்தம்பியும் சகாக்களும் தண்ணீரில் இறங்கி வள்ளத்தைக் கரைக்குத் தள்ளினர். கரையில் நின்ற சிலரும் கைகொடுத்தனர். வலை இழுப்புக்கும் சிலர் உதவினர்.

கரையில் வள்ளத்தைத் தொடுத்துவிட்டு சவளைத் தூக்கிக்கொண்டு வந்த சாமித்தம்பியின் நடையில் அசதி தெரிந்தது.

வள்ளத்தை எட்டிப் பார்த்த வீரமுத்து சம்மாட்டிக்கு ஒரே குதூகலம்! சுறுவும் சீலாவும் பாரையுமாக நிறைய மீன் பட்டிருந்ததே காரணம். வள்ளத்திலிருந்த மீன்களை அள்ளிக் குவித்தபடியே பெர்னாண்டோ கூறினான்: ''ராத்திரி காத்துக் கிளம்புறமாதிரிப் பட்டுது... துமியும் தொடங்கவே பயந்து போனம்.''

''அதனால என்ன...? நிறைய மீன் பட்டிருக்கு... செட்டிக்காரக... பலே... பலே...'' என்று குதூகலித்த சம்மாட்டியின் குதூகலம் சாமித்தம்பிக்கும் சகாக்களுக்கும் எரிச்சலையூட்டியது.

மீன்களை அள்ளி கூடைகளில் குவித்தபடி கண்களால் வீரசொக்கனுடன் பேசியபடி ஏலம்கூறத் தொடங்கினாள் கண்மணி.

''தினமும் நான்தான் வாங்கிகிறேன் .. நியாயமாக ஒரு விலையைப் போட்டுத் தரவேண்டியதுதானே?'' என்

## தாய் !

பெற்றெடுத் தாயெனைப் பேணி வளர்த்தாய்
பகலிரவாய்க் கண்விழித்துப் பாலுமீந்தாய்
உற்றவொரு நோய்வந்தா லுளந் துடித்தாய்
உண்ணாமை லருகிருந் துருகிநைந்தாய்
வற்றாத கண்ணீர் வடித் தழுதாய்
வையத்தெனை யுமோராளாக்கி வைத்தாய்
பற்றற்றுப் பலன்கருதாப் பணிசெய்தா யென்றோ
இப்புவியிலென் தாயெனப் பேரெடுத்தாய்...?

— மணிமணாளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படைப்பாளிகள் கவனத்திற்கு...

- சிறுகதை–கவிதை–கட்டுரை என்று எதை எழுதுவ தானாலும் தாளின் ஒரு பக்கத்திலேயே எழுதி அனுப்புங்கள்.
- கவிதைகளை அனுப்பும்போது பிரதி எடுத்துக்கொள் ளுங்கள்.
- பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படாத விஷயங்களைத் திருப்பப் பெறவேண்டுமானால் போதிய முத்திரை களுடன் அனுப்பி வையுங்கள்.
- தழுவல் – மொழிபெயர்ப்பாயின், மறவாமல் மூலத் தைக் குறிப்பிடுங்கள்.
- கதை, கட்டுரைகளைக் கூடியவரையில் 'புள்ஸ்காப்' தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி யனுப்புங்கள். மிக நீண்ட கவிதைகளைத் தவிர்த்துக் கொள்வது விரும்பத்தக்கது.
- தரமாக எது வரினும் பிரசுரிக்கப்படும். புதியவர் களுக்கும் வாய்ப்பளிப்பதே எமது முதன்மையான நோக்கம். எனவே உற்சாகமாக எழுதுங்கள்; வர வேற்கின்றோம்.

— ஆசிரியர்.

ரூர் காசிம் காக்கா. ''நூற்றி அம்பது...''

''இல்லே முதலாளி... இரு நூறுன்னாலும் போட்டுத் தர ணும்... நல்ல மானுளுவைச் சுறு எல்லாம் இருக்கு.''

''சரி... சரி... நீ விடப் போறியா...? நூற்றி எழு பத்தியஞ்சு... எடுக்கவா?'' என்றபடி சம்மாட்டியின் பக் கம் திரும்பி, ''என்ன சம் மாட்டியார், எடுக்கவா?'' என்றார்.

''என்ன காக்கா, உங்க ளுக்கு ரெண்டு விலே சொல்லு வேணு...? ஏதோ நியாய மாகக் கொடுங்க... நீங்களும் பிழைக்கனும். நானும் பிழைக் கனும்...''

காசீம் காக்காவிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்ட சம்மாட்டி தொழி லாளர்களுக்கு வழக்கமான கூலியையும் சில மீன்களையும் கொடுத்தார். மீன்களில்தான் சிறிது தாராளம் இருந்தது.

அதிகமாகக் கூலி தரு வார் என்று எதிர்பார்த்த சாமித்தம்பியும் சகாக்களும் மனதில் குமுறினர்கள். சவளை யும் வலையையும் தூக்கிக் கொண்டு சோர்வுடன் நடந்து செல்கையில், 'எம்மிடம் ஒரு வள்ளம் சொந்தமாக இருந் தால்...' என்ற எண்ணம் மூவ ரின் மனதிலும் எழுந்தது.

''இன்னிக்கென்னாலும் ஒரு அஞ்சு ரூபா கூடப் போட்டுத் தந்திருக்கலாம்... ம்...'' என்று தனது மனக் கிடக்கையைச் சொல்லி அங்க லாய்த்தான் வீரசொக்கன். பெர்ணண்டோவும் அவனது ஆதங்கத்தை ஆதரிப்பவன் போல, ''நாம நாணயமாக வேலே செய்கிறோம்... சம் மாட்டி பலே ஆளாக இருக் காரு... அதிக மீன் பட்ட நாளிலகூட, ''கூலி கூட்டித் தரமாட்டேன். உங்களால் முடியாதுன்னு வேலே செய்ய வேற ஆட்கள் இருக்காக...'' என்பாரு... வள்ளச் சொந்தக் காரர் என்கிறதால எல்லாத் தையும் சுருட்டிக்கொள்கிறாரு. காசு ஆசை பிடித்த பிசாசு...'' என்றான் வெறுப்புடன்.

''இந்தச் சம்மாட்டிகளே இப்படித்தான். நமக்கு ஒரு வயிறு இருக்கென்னே நினைச் சுப் பார்க்கமாட்டாக... நம்ம உழைப்பாலதானே பணம் சம்பாதிக்கிறோம் எண்ட எண் ணமே அவுகளுக்கு இல்லே...'' என்றான் சாமித்தம்பி. ''ம்... நம்ம கிட்ட ஒரு வள்ளம் இருந்திட்டால் நாம விரும் பினமாதிரி சம்பாதிக்கலாம்.''

''ஏலாத காரியத்தை நினைச்சு என்ன பிரயோசனம் மச்சான்...'' என்ற பெர் ணண்டோவை இடைமறித்த சாமித்தம்பி, ''லே... அப் படிச் சொல்லாதே... நினைச் சால் சாதிக்கமுடியாத காரி யம் எதுவும் இல்லே. சிறுகச் சிறுகப் பணம் சேர்ப்போம்... காலம் நேரம் கூடி வரும் போது கூட்டாக வள்ளம் வாங்குவோம்... காலம் நேரம் கூடிவராமலா போகும்...?'' என்றான் நம்பிக்கையுடன்.

''இப்பவே கடன், நாம எங்கே பணம் சேர்க்கிறது ..?'' என்று நம்பிக்கையீனமாகக் கூறினன் பெர்ணண்டோ.

''நீதான் பெண்டில் பிள்ளையையும் மறந்து உழைக் கிறதையெல்லாம் கள்ளுக் கொட்டிலில் கொட்டிவிடு வாயே... அப்புறம் ஏது மிச் சம்... முதல்ல குடியை மற... நல்ல குடிமகனுக மாறு...'' என்றான் சாமித்தம்பி கண் டிப்புடன்.

சிறிது நேரம் மௌன மாக நடந்து வந்த வீரசொக் கன் சொன்னான்: எங்களுக் குச் சொந்தத்தில வள்ளம் கிடைச்சால் பாதி வரும்படி வள்ளத்தில கடலுக்குப் போற வனுக்குத்தான். உழைக்கிற வனுக்கு இல்லாத வரும்படி மற்றவனுககு எதுக்கு...?''

நண்பர்களின் மனதில் வள்ள ஆசை வந்துவிட்டது. அது நிறைவேறும் நாள் எப் போது வரும்? காலம்தான் பதில்சொல்ல வேண்டும்!

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய அறமே அழிக!

ஏழைகள் என்று எம்மை
ஏய்ப்போரின் முன்னே நின்று
வாலாட்டும் இனமாய் யானே
பாட்டுக்கள் பாடிச் சென்று;
கோலாட்டம் போட்டுக் காணும்
தூ!தொழில் எனக்கு வேண்டாம்!
காலோடு கையு முண்டு
கைத்தறி கிடக்கு காணும்!

ஈராறு வருடம் கற்று
எடுத்துள்ள பெறு பேறே...
சாறுகப் பிளிந்த அப்பா
சதையினில் பிறந்த துதான்!
மாறுக வயலில் சென்று
உழைத்துமே மக்க ளோடு
போராடி நின்றி ருந்தால்
துணையாகக் காண்பார் அப்பா!

தரமாகக் கல்வி கொண்டு
கரைகண்ட என்னைப் போன்றோர்
உரம்போடப் பொருளோ இல்லா
நிலையினில் கிடந்து மாள;
உரமிட்ட தகுதி அற்றோர்
பட்டியல் மூலம் வேலை
வரமிட்டு வைக்கு மிந்த
'சமுதாய அறமே அழிக!

தரங்கண்ட தகுதி இன்று
சாக்கடைச் சாறுய் ஓடும்;
பரந்துள்ள மக்க ளெல்லாம்
மாசக்தி என்று பாடி
திரண்டெழல் ஒன்றே பாதை
விடுதலை அடையும் நாளை
விரைந்திட மிகக் கெதியில்
ஓரணி இணைவோம் நோக்கி!

— சம்மாந்துறை — "ஈழக்குயில் இத்ரீஸ்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டேன் மீண்டும் பிறவி

"கங்காதரன்"

1. அன்புடை மக்காள் ! ஆர்வமீ தூரநீர்
அழைத்தமை கண்டுளம் நெகிழ்ந்தேன்.
மன்பதை யுலகில் யானுதித் தாண்டு
நூறுஇன் றுயதே யென்னும்
இன்புறு செய்தி யானுணர்ந் தில்லேன்
இயம்பினீர் எனக்கதை யெடுத்து
நன்றுயர் மனத்தார்க் கன்றியிவ் வெண்ணம்
நானிலத் துதிப்பது முண்டோ ?

2. ஆண்டுகள் நூறு ஆயது அதனல்
மீண் டொரு பிறவிநும் மண்ணில்
பூண்டிடு கென்று வேண்டினீர் ; புதுமை
புரிந்தொளி பாய்ச்சிடல் விழைந்தீர்
வேண்டுகோள் வியந்தேன். வினையனேன் விடுக்கும்
வில்விழி அம்பெனும் கேள்வி
ஈண்டுமை யெதிர்ப்பின் இயம்பவெப் பதிலுமக்
கிங்குள தெனவெமக் குரைப்பீர் !

3. அந்நியர் தளையை அகற்றியே வாழும்
அரும்பெறற் பேறுநீ ரடைந்தும்
மன்னுமிவ் வுலகில் மாண்புற வோங்கி
மலர்ந்துநீர் வாழ்நிலை யுளதோ ?
தன்னினத் தரையும் தமரெனக் கொள்ளா
தருக்கியே அடிமை கொண்டாலும்
புன்மைய மனத்தால் பொழிவிழந் தழியும்
புலைத் தொழில் புரிவதும் எதற்கோ ?

4. சாதிகள் இல்லை யென்றிவன் சாற்றிச்
சலித்துமே போயினன் பலகால்
ஓதிநீ ருணர்ந்தும் உணர்விலா ராகி
ஓதுவீ ராயிரம் சாதி.
வேதியன் முதலாய் விளங்கு பல்கோடி
சாதிகள் நாடொறும் படைத்து
சாதியுள் ஆயிரம் சாதிகள் வகுத்து
சண்டைகள் நிதம்மிகப் பிடித்து;

5. ஊருக்குள் மிகுதியும் வேற்றுமை பெருக்கி
உயர்விழி வெனுநிலை மிகுத்து
பாருக்குள் மக்களைப் பழித்திழித் தொதுக்கி
பண்பிழி பித்தரி ஞழ்ந்து
யாருக்கு மிறைவன் என்ற பேரு ண்மை
ஏற்றிடா தவனுறை யகத்தும்
நேருக்கு நேராய்ச் சாதிதந் தொதுக்கும்
நெஞ்சுறு மடமையெத் தகைத்தோ ?

6. பெண்மையிற் கீதந்த பேறிவண் இல்லை
பேரருட் சக்தியே அவள்தான்
உண்மையிவ் வாறு இருக்கவும் நீவிர்
உளமிலாப் பிண்டமென் றவளை
கண்டவப் போதே காமுகர் உவக்கும்
கணிகை மாதவளெனக் கருதி
உண்டுஇத் தசையின் வேட்கையைத் தணித்தல்
உவப்பெனக் கருதுமும் இழிவும் -

7. நிலையிலா வுலகில் நிலவுமிப் பிறவி
நிலைத்திட நிலைக்களன் அவள்தான்
தலையதாய் அவளைத் தாங்குமும் கடமை
சற்றுநீர் உணர்ந்தமை அறியேன்.
இணையவள் நாடின் உறுகுவை கொணர்தி
இல்லையேல் உனையகத் தேற்கேன்
விலையெனக் கீதென் றியம்பிநீர் மணவினை
வீதியில் விலைப்படல் சரியோ ?

8. கரும்பணங் குவித்துக் கண்ணியங் குலைக்குங்
கசடரைப் பொருளென மதித்து
விரும்பியே யவர்கா லடியினில் வீழ்ந்து
விதந்திடு மாளுமை யிழந்து
வரும்பெரும் பேறென மறுகிநின் றுழன்று
வரிசையில் எடுபிடி யாகி
விரும்பிநீர் மேலோர் விதிகுலைத் திடவே
விழைந்திடு மிழிமையெவ் வகைத்தோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நண்பரே போல நடித்துமிழ் நஞ்சால்
நல்லவர் தமையழித் திடலும்
பண்பிலா அரசியற் பரத்தையை அண்டி
பற்பல கோள் மிகச் சொல்லி
பண்புளார் உயர்ந்தார் பரத்தமை அரசியல்
பயின்றிடல் மறுத்துளம் உயர்ந்தார்
தண்புனல் அனையார் தமையெலாம் ஒழிக்கச்
சதிமிகச் செய்வதெத் தகைத்தோ ?

10. தமிழெனும் அமிழ்து நம்மொழி யென்னும்
தன்மைநீர் உணர்ந்தமை யறியேன்
இமிழ்கடல் வைப்பின் இலங்குநன் மணியாம்
இம்மொழி வளம்பெறல் விழைந்தோ
கமழிசை குலைக்கும் திசைமொழி யாங்கிலம்
கலந்தபல் சொற்றொடர் மிசைந்து
குமிழென மறையும் கதைபல புனைந்து
கொல்வதேன் வளருமிம் மொழியை ?

11. எக்கருத் தினையும் நும்மொழி துணையாம்
எடுத்தியம் பிடவளம் பெறுமே
இக்கருத் தினையே ஏற்றுநீர் ஈண்டை
இயற்றிடும் அருஞ்செயல் இயம்பீர்
மக்களுக் குயர்வு மதிப்பிவை தாரா
மனக்கொலை புரிந்திளம் உளத்தை
மிக்கவே கெடுத்து மிகுபொருள் குவிப்பான்
இழிகதை புனைவதும் எதற்காய் ?

12. கன்றிய மனத்தன் ஆகிமுன் நாளில்
கனன்றுநான் விடுத்தபல் வேண்டல்
என்றுநீர் மதித்தீர் இன்தமிழ்ப் புதல்வ
எடுத்ததை இயம்புக ஈண்டு
அன்றொரு கவிஞன் பாரதி இருந்தான்
அவன்கவி மிகமிக இனிதாம்
என்றிசை பாடிநும் ஏற்றமே கருத்தாய்
எடுத்துவந் தீர்சில விழவே.

13. ஒறுத்திடு மடிமைத் தளையகற்றிடலும்
உறுதவ நனிதமிழ் உயர்த்த
மறுத்திடு தமிழர் மடமையைக் கண்டு
மனம்மிக மறுகிநின் றூர்த்து
அறுப்பன்இவ் வினத்தின் வினையிவண் என்று
அறைந்தனம் தகுநெறி யனைத்தும்
மறுத்த நும் நெஞ்சுள் மடமையே தேக்கி
மதித்திலீர் என்கருத் ததுவும் !

14. அன்றைய தமிழகத் தரற்றிய பின்னர்
அகம்மிக மெலிந்துளம் நொந்து
நன்றினி விடைபெறல் நலமெனக் கென்று
நான்நினைந் திடவைங் கரனும்
நின்றிடல் வேண்டா வருகவென் றென்னை
நீள்கரம் நீட்டியாட் கொண்டான்.
இன்றுஆண் டறுபதின் மேலது ஆகியும்
என்கருத் ததனை நீர்ஏற்றீர் ?

வேறு

மதித்துக் கருத்தினை வாழ்க்கையி லேற்றிடும் ஆண்மையில்லார்
துதிக்கப் புகுந்தமை சொல்லருங் கேளிக்கை சூழ்வினையே
விதிக்கும் பணியெனக் குண்டெனும் ஓர்நிலை இன்றுளதேல்
பதிக்குள் அடங்குவ தன்றியிம் மண்மிசை மீண்டிடனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பரிலும் பாரதி முதன்மையானவன்

கவிஞனென்பவன் யார்? அவன் எப்படிப்பட்டவன்? ''மக்களினம் மாட்சிகொள்ள-எழுச்சிகொள்ள - உணர்விலே ஊற்றெடுத்த ஒளியாய், காட்டாற்று வெள்ளம்போலக் குமுறுகின்ற கோளரியே கவிஞனுவான்'' என்று அடையாளங் காட்டிவிட்டு போயிருக்கின்முர், ஈழத்துப் பழம்புலவர் வித்துவான் க. வேந்தனுர்.

அவர் அடையாளங் காட்டிய கவிஞன் பாரதியொருவனே. 'கவிச் சக்கரவர்த்தி கம்பரை விடவா பாரதி பெரியவன்?' என்ற வினு நம்மிடையே எழ நேரிடலாம். ஆம்; பாரதி பெரியவன்தான்.

ஒருவன் வாழ்ந்த வாழ்கின்ற காலகட்டத்திலிருந்தே அவனது தகுதியை எடைபோடலாம்.

கம்பரிலும் பாரதி பலபடி உயர்ந்து முதன்மை வகிப்பதற்கான சில முதன்மைக் காரணிகளை ஆராய்வோம்.

கம்பர் பின்பற்றிய பாதை வேறு; பாரதி பின்பற்றிய பாதை வேறு. கம்பர் உயர்மட்டத்தினர்க்கு மட்டுமுரியவர்; பாரதி சகலர்க்குமுரிய சர்வ கவிஞன். கம்பர் தமிழைப் பாடினுர்; பாரதி சமூகத்தைப் பாடினுன். கம்பர் தமிழுக்கு அணிசெய்து நகையணிந்து அழகு செய்து பார்த்தார். தமிழ்நங்கையின் அழகும் செழிப்பும் வளமும் அகிலத்தின் விழிகட்குப் புலனுனது. பாரதியால் சமூகம் நெறிப்படுத்தப்பட்டு, வழிநடத்தப்பட்டு, பூரண மனிதர்களாய் வாழ முனைகின்றது.

கம்பர், இதைத்தான் - இப்படித்தான் - இந்த வேளையில்தான் பாடவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, வரையறுக்கப்பட்ட சில கட்டுக்கோப்புக்குள் நின்று, அவையிலே - அரண்மனையிலே-ஆன்முேரின் அனுசரிப்போடும் கற்முேரின் உந்துதலோடும், ஆறஅமர அமர்ந்திருந்து சிந்தித்துப் பாடினுர்.

பாரதி, நினைத்த கோணத்தில் - நினைத்தபடியே, நிபந்தனையின்றி அப்பட்டமாக ஆலையிலே-சோலையிலே-அங்காடியிலே கைகொட்டி சத்தமிட்டுப் பாடிய உணர்ச்சிப் பிளம்பு.

கம்பர் கவிதைக்குரிய இலக்கணங்களோடு காவியம் பாடினுர். அதுவும் ஒரு சமூகத்திற்குரிய ஒருகால கட்டத்திற்குரிய கற்பனை வெள்ளமாக. தமிழ் நங்கை இன்றும் அழகாக இருப்பது கம்பராலேதான்.

பாரதியும் கவிதைக்குரிய இலக்கணங் கெடாமலே, ஆயினும் இலகுதமிழில் பாடி, சமூகத்தை அழகுசெய்து வாழவைத்தான்.

கம்பர் மறக்கின்ற கவிஞனுனர்; பாரதி மறக்கமுடியாத நடைமுறைக் கவிஞனுன். கம்பரின் கருப் பொருள், அக்காலத்திற்குரிய இயக்கங்களும் நிலைப்பாடுகளுமே. பாரதியின் கருப் பொருள் மானுடம் என்ற இனத்திற்கே பொதுவான பசி - பட்டினி - வறுமை - மடமைகள் - அடக்குமுறைகள் - அடிமைத் தனங்கள் - விடுதலை உரிமை இப்படியிப்படி. பாரதியின் சத்திய வேட்கையும், புதுமையான எண்ண உணர்வுகளும்தான், அவனை எங்களில் ஒருவனுக இன்றும் உரிமை கொண்டாட வைக்கின்றது.

'மூங்கில் இலை மேலே தூங்கும் பனிநீரே' என்று எழுதிவிட்டு, அடுத்த அடியைத்தேடிக் காததூரம் போயும் அகப்படாமல் தவித்தவர் கம்பர்.

---

**வேலணையூர் சு. கருணுநிதி.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பரின் கவிதைகள் பெரும்பாலும் கற்பனை வெள்ளமே! கம்பர் கவிதைகள் பிறந்தன; முதிர்ந்தன; அவ்வளவு தான்!

'தனியொரு மனிதனுக்கு உணவில்லையென்றால் ஜெகத்தினை அழித்திடுவோம் . . .' என்று குமுறிக் கொதித்துப் பாடிய கவிதைகள் பாரதியுடையவை. வெறும் கற்பனை வெள்ளமல்ல அவன் கவிதைகள்; கொழுந்து விட்டெரியும் புரட்சித்தீ. அன்று எட்டயபுரத்தில் பாரதி மூட்டிய கவிக் கொள்ளிதான், இன்று உலகெங்கும் காட்டுத் தீயெனப் பரவி, எரிகுன்றெனப் பற்றிச் சுடர்விட்டு எரிகின்றது.

கம்பர் கற்பனை வெள்ளம்;
பாரதி காட்டுத் தீ!

வெள்ளத்தால் ஏற்படுகின்ற விபரீதங்களைப் பிறர்க்கு எடுத்தியம்புவதற்கு அதிக பிரயத்தனம் எடுக்க வேண்டும். தீயினால் ஏற்படுகின்ற விபரீதங்களைப் பிறர்க்கு உணர்த்துவது சிரமமல்ல. உணர்வற்றவனாயிருந்தாலுஞ் சரி, அறிவீனனாய் இருந்தாலுஞ் சரி, எளிதில் புரிய வைத்துவிடலாம். இத்துணை எளிய தீக்குச்சிதான் பாரதியின் கவி வரிகள்.

கம்பர் கவிஞராகவே பிறந்து, கவிஞராகவே வாழ்ந்து, கவிஞராகவே மறைந்தவர்.

கண்ணன் பாட்டிலே கண்ணனைத் தெய்வமாய், குருவாய், அரசனாய், ஆண்டியாய், சீடனாய், வேலைக்காரனாய், காதலனாய், காதலியாய், மந்திரியாய், நண்பனாய், பெற்றோராய்க் கண்டு சிருஷ்டித்த கவிதைகளைக் கிரகித்துக் கொள்வோமாயின், பாரதி கவிஞனாய் மட்டுமல்ல; போகியாய், ஞானியாய், சித்தனாய், ஆஸ்திகனாய், நாஸ்திகனாய், அரசியல்வாதியாய் வாழ்ந்து போயிருக்கிறான் என்ற உண்மை புலப்படும்.

வாழ்க்கையென்ற பாதையிலே, கால் போன போக்கில் நடந்து செல்கின்ற நம்மை அறிவுரைகளால் வழி நடத்தி, புத்திகள் புகட்டி, நன்னெறிப்படுத்தி, பூரண மனிதனாக உலவச் செய்யும் தெய்வீகக் கவிதைகளைப் பிரசவித்த பாரதியை நினைத்தாலே நெஞ்சம் குளிரும்.

# பாரதி — ?

மாளிகையில் உலவிய
'கவிதா'ம்பிகையை
உழைக்கும் மக்களின்
மண்குடிசைக்குள்
பிரதிஷ்டை செய்தவன்!

சாதித் 'தீ' யிற்கு
எண்ணை வார்த்த காலத்தில்
தண்ணீர் வார்த்த
பொதுவுடமையாளன்!

எச்சிலைக்கு ஏழை வாடும்
இழி நிலைக்கு —
சமாதிகட்ட
'கவி'க் கற்கள் சுமந்த
மானிட நேசன்!

இந்தச்
சமூகச் சாரதிக்கு —
நினைவு மண்டபங்களையும்
விழாக்களையும் எடுத்து
மகிழும் நாங்கள் . . .
அவன் ஆசைகளுக்கு
அணுவளவாவது
உயிரூட்டுகிறோமா
என்பது தான் —
அவனுக்கே புரியாத
"?" குறி.

– ஸ்ரீ தேவிப்ரியா.

எங்கெங்கு பார்க்கிலும் அவனுருவம் எதை எதைக் காணிலும் அவன் தோற்றம்! பார்க்குமிடத்திலெல்லாம் அவன் முகம் தோன்றுதடி! கேட்கும் குரலிலெலாம் அவன் பாடல் கேட்குதடி! இப்படியெல்லாம் பாரதி கண்ணனை - சக்தியைக் கண்டான். நாமோ அந்த அடிகளிலேயே பாரதியைக் காண்கின்றோம்.

அவனது நூற்றாண்டில், அவன் காட்டிய மார்க்கம் செல்வோமென, திடசங்கற்பம் பூணுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சித்திரம்

# பாரதி மீண்டும் வருகிருன்

கோகிலா மகேந்திரன்

(திருக்கைலாய மலேயில் சிவ பெருமான் நிஷ்டையில் அமர்ந்திருக்கிருர். வேத ஹோஷம் ஒலித்துக் கொண்டிருக்கிறது)

தமிழ் மகளின் அறிமுக உரை :-

வணக்கம். நான்தான் தமிழ் மகள். முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்களிலும் செல்லமாக வளர்க்கப் பட்ட நான் பாவலர்க்குச் சாரதியாம் பாரதியிஞல் புதுப்பொலிவு பெற்றேன். விண்ணுலகில் மற்றவர் விதந்துரைக்க வாழ்கின்ற பாரதி தனது நூற்ருண்டு விழா பூமியில் கொண்டாடப்படுவதை அறிந்து அதைப் பார்க்க விரும்புகிருன்.

(உமா இறைவனிடம் வருகிருள்)

உமா :- சர்வலோக நாதா !

சிவன் :- (மௌனம்)

உமா :- சர்வலோக நாதா ! (அண்மையில் வந்து சிவன் காலடியில் அமர்ந்து) நான் எப்பொழுது கூப்பிட்டாலும் உங்கள் திருச் செவிகளில் விழுவதில்லே. என்னேப்பற்றி அக்கறையுமில்லே. அவருடைய நிஷ்டையும் அவரும் . . . . (சிணுங்குகிருள்)

சிவன் :- ஹா . . . ஹா . . . யாரது உமாவா? எனது சக்தியாகிய உன்னேப்பற்றி யான் கவலேப்படாதிருந்தால் உலகம் எப்படி இயங்கும்? அது சரி, என்ன காரியமாக வந்தாய் ?

உமா :- காரியம் ஒன்றும் இல்லாவிட்டால் வரக் கூடாதாக்கும். உங்களுடன் பூவுலகப் புதினங்களேக் கதைத்துப் பொழுது போக்கலாம் என்று வந்தால் . . .

சிவன் :- ஓ ! அப்படியா? சரி, சரி, சொல்லு. பூவுலகிலே என்ன புதினங்கள் ? முக்கியமாக, தமிழ் பேசும் நாடுகளிலே என்ன செய்திகள் ?

உமா :- தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பாரதி நூற்ருண்டு விழா தடல் புடலாகக் கொண்டாடப்படுகிறதாமே ! ம் . . . (எட்டிப்பார்த்து) அதோ பாரதியே வருகிருன்.

(பாடல் ஒலிக்கிறது)

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலே வாணர்களும் இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்-(தொன்று)
யாரும் வகுத்தற் கரிய பிராயத்த
ளாயினு மேயெங்கள் தாய்
பாருள் எந்நாளுமோர் கன்னிகை என்னப்
பயின்றிடுவாள் எங்கள் தாய்-(தொன்று)

முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள் - (தொன்று)

(பாடலேப் பாடிவந்த பாரதி சிவனே வணங்குகிருர்)

சிவன் :- என்ன, பாரதியாரே நலந்தாஞ? பூவுலகிலே எல்லா இடமும் உமக்கு விழா எடுக்கிருர்களாமே. இப்போது எம்மை யாரும் நினைத்துக் கொள்வதில்லே. உம்மிடம் எனக்குப் பொருமையாக இருக்கிறது.

பாரதி :- அபச்சாரம் சுவாமி. அபச்சாரம். உங்களே நினேப்பதும் என்னே நினேப்பதும் சமமாகுமா? தாங்கள் அவ்வாறு கூறக்கூடாது.

சிவன் :- சரி, அது நிற்க, நீர் என்ன விடயமாக வந்தீர் ?

பாரதி :- சுவாமி, மீண்டும் ஒருமுறை பூவுலகம் சென்று எனது சிந்தனைகள் எவ்வளவு தூரம் செயற்படுகின்றன என்று பார்த்துவர ஆவலாக இருக்கிறது. பெண்ணடிமைத்தனம் முற்ருக ஒழிக்கப்பட்டுப் பெண்கள் ஆண்களுடன் எல்லாத் துறைகளிலும் சரி நிகர் சமானமாக வாழ்கிருர்கள் என்று சமீபத்தில் பூமியில் இருந்து வந்தவர்கள் சொல்கிருர்கள். அதைப் பார்க்க விரும்புகிறேன் இறைவா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமா:- மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் இறப்பவர்களின் உயிரைக் கவர யம தர்மராஜன் செல்லும்போது, அவனு டன் பாரதியையும் அனுப்பிவிடுங்கள் சுவாமி. பாவம் பாரதி.

பாரதி:- அதோ, யமதேவன் வருகிருர் சுவாமி.

யமன்:- (வணங்குகிருன்)

சிவன்:- அடுத்த முறை நீர் ஈழநாட்டிற்குச் செல்லும்போது பாரதியாரையும் உமது எருமைக் கடாவில் அழைத்துச் செல்லும்.

யமன்:- எருமையில் 'டபிள்' போகமுடியாது பிரபு! இருந்தாலும் தங்கள் கட்டளை அப்படியாயின் முயற்சிக்கிறேன்.

யமன்:- (பாரதியைப் பார்த்து)
வாரும் பூவுலகம் செல்வோம். ஈழ நாட்டிலே உள்ள தெல்லிப்பழைச் சந்தியில் இன்று மோட்டார் சைக் கிள் விபத்தில் ஒரு உயிர் போகும். அங்கே செல்லும்போது உம்மையும் கூட்டிச்செல்கிறேன் வாரும்.

தமிழ்மகள் உரை:—

நாட்டின் நடப்பைப் பார்ப்பதற்குத் தெல்லிப்பழைச்சந்தி நல்ல ஒரு இடம். பாரதியும் காலனும் அங்கே மறைந் திருந்து நடப்பவற்றைப் பார்க்கிருர் கள்.

(யமனும் பாரதியும் வந்து தெல்லிப் பழைச் சந்தியில் மறைந்திருக்கிருர் கள்)

யமன்:- இதுதான் தெல்லிப்பழைச் சந்தி. அதோ அந்த மதகில் இருந்து ஒருவர் பத்திரிகை படிக்கிருர். கேட்போம். வாரும்.

ஒருவர்:- என்ன . . . என்ன தலைப்புப் போட் டிருக்கிருன் என்று பாப்பம்.
(பேப்பரை விரித்துப் படிக்கிருர்)
''அப்பலோ 20 என்ற விண்வெளிக் கப்பல் சந்திரத் தரையில் இறங்கி யுள்ளது இதில் பயணம் செய்த அமெ ரிக்கக் குழு தமது நாட்டுக் கொடியை அங்கே நாட்டியுள்ளது'' . . ஓ . . . நல்ல வடிவான படமும் போட்டிருக் கிருன் . . .

யமன்:- நீர் முன்பு பாடியது சரியாக நடந் திருக்கிறது. உமக்கு மிகுந்த சந்தோ ஷம் என்ன?

(பாடல் ஒலிக்கிறது)

## சாட்சி!

மதுவிலும்
கொடியவன் நான் . . .
எந்தக் கொலைஞனும்
என்ருே ஒருநாள்
என்முன்
மண்டியிடுவான்!
சட்டங்கள் —
சம்பிரதாயங்கள் —
இவை எனக்கு
வெறுந் தூசு . . .
கோட்டில்
வழங்கிய தீர்ப்பையும்
மாற்றியமைக்கும்
வல்லமை
எனக்குண்டு!
ஏனெனில் —
நானே,
உன் மனச்சாட்சி!

— ஷியாமளா.

மந்திரம் கற்போம் வினைத்தந்திரம் கற்போம்
வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப் பெருக்கும் சாத்திரம் கற்
போம் — (வெள்ளிப்பனிமலை)

யமன்:- அதோ, அங்கே இரண்டு ஆங்கிலேயர் வருகிருர்கள். பாரும்.

English lady:- Every second your span of life is being shortened, the moment that has gone is no longer yours, the moment that is coming may not be yours at all. So, start this very moment to earn etevnal joy.

Other lady:- Yes that's true. But, our people lack will. They don't lack strength.

பாரதி:- இப்போது நமது தமிழ் மக்களில் இரு வர் வருகிருர்கள்.

ஒருவர்:- ஏதோ ஒரு காரணம் பற்றி ஒருத்த ரோடை ஒருத்தர் பழகிறதும் அந்தக் காரணம் தீர்ந்தபின் ஒருவரை ஒரு வர் விட்டுப்பிரிஞ்சு கவலையில்லாமல் போறதும் இயற்கையாப் போச்சுது. உள்ளன்போடை வாழ்க்கையிலை கலந்து பழகி உணர்வாலை ஒன்றுபடுற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு அரிதாப்போச்சுது. நட்பு வகையிலே நடந்திட்ட இந்த மாறுதல்தான் காதல் வாழ்க்கையிலேயும் நேர்ந்திட்டுது. சீ . . . சீ . . .

மற்றவர்:- ஆமாம். யந்திர நாகரிகமும் பொருட்கவலேயும் கணவன் மனைவிக்கிடையில் கூட ஒரு மேற்போக்கான அன்பைத்தான் வளர்த்திருக்கின்றன. காதல் என்கிற ஆழ்ந்த உணர்வு உள்ளத்திலே வளர்வது அரிதாகிவிட்டது.

யமன்:- இலங்கையின் ஆட்சி மொழி வருகுது, கேளும்.

(தமிழர் கடந்து செல்ல, இரு சிங்களப் பெண்கள் உரையாடிக்கொண்டு செல்கிறார்கள்)

பாரதி:- அதோ இரண்டு ஜேர்மனியர். (அவர்கள் ஜேர்மன் மொழி கதைத்துச் செல்கின்றனர்)

யமன்:- எப்படி இருந்தாலும் நீர் அன்று பாடியதுபோல தமிழ்மொழி தான் இன்னும் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது.

(பாடல் ஒலிக்கிறது)

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

(ஒரு பெண் சைக்கிள் ஓடிக்கொண்டு செல்கிறாள்)

பாரதி:- ஆ . . . பெண்களெல்லாம் ஆண்களுடன் சமமாகச் சைக்கிள் ஓடுகிறார்கள். நான் பாடிய சமத்துவம் உண்மையாகவே வந்துவிட்டது போலத்தான் இருக்கிறது.

யமன்:- உஹ்ம். அப்படி விரைவில் முடிவு செய்யக்கூடாது. ஒரு வீட்டினுள் நுழைந்து பார்த்தால்தான் உண்மை தெரியும் வாரும் காட்டுகிறேன். (இருவரும் போகிறார்கள்)

தமிழ் மகள்:- சிவபெருமானின் தலையில் இருப்பதால் எட்ட முடியாது என நினைத்திருந்த அம்புலித் தரையில் மனிதன் காலடி வைத்துவிட்டான். மூன்று நாலு மொழிகளை மட்டும் அறிந்திருந்த பாரதி அன்று என்னை விட அழகியவன் இல்லை என்று பாடினான். இன்று பல மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று, தமிழாராய்ச்சி மகா நாட்டுக்கும் வித்திட்ட தனிநாயகம் அடிகளார் போன்றவர் ஒப்பீட்டு ஆராய்ச்சிகள் மூலம் அதையே கண்டு பிடித்திருக்கின்றனர். பெண்கள், கல்வி, தொழில் நுட்ப, அரசியல் துறைகளில் துரித முன்னேற்றம் கண்டு ஆண்களோடு சரி நிகர் சமானமாகப் போட்டியிடுகிறார்கள். இவற்றைக்கண்டு பெரிய குதூகலம் கொள்கிறான் பாரதி. ஆனல் . . .

யமன்:- இப்படி ஒளித்து நில்லும்.

பாரதி:- உங்கள் பெரிய உருவந்தான் தெரியப்போகிறது. வடிவாக மறைந்து நில்லுங்கள்.

(வீட்டிலே, வேலையில் இருந்து திரும்பி வந்து பேப்பர் பார்த்துக்கொண்டிருக்கிறார் கணவர்)

கணவன்:- பாமா . . . பாமா . . .

மனைவி :- என்ன, கூப்பிட்டிங்களே ! (உள்ளிருந்து வருகிறாள்)

கணவன்:- கூப்பிட்டனீங்களோ, கூப்பிடேல்லேயோ எண்டு கேட்டுக் கொண்டு நிக்காமல் தேத்தண்ணியைக் கொண்டாவன் கெதியா.

மனைவி :- நானும் உங்களைப்போல வேலையாலேதானே வந்தனான். எனக்கும் களைப்பு இருக்குந்தானே, கெதியாய்க் கொண்டா எண்டு நிண்டால் நான் என்ன செய்யிறது ?

---

## கற்பு

தன் மனைவி
தாய் பிள்ளை
என்றிவர்கள்
செய்கையில் பிறழ்ந்தால் —
கற்பிழந்தோராம் !
இவர் கடையகத்தாராம் !
தாம் —
தாசி மனை புகுந்து
மீண்டிடினும்
கனவான்கள் தானும் !
என்னே,
ஆடவர்க்கென்று
இவர் வகுத்த
கற்பு நெறி — ?

— ஷியாமளா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியதி

மரம் பழுத்தது ;
மரத்தினும் இனிதே
மகிழ்ந்தது வெளவால்!
ஏழைக் கூலியின் —
கரம் பழுத்தது.
அந்தப் பழுப்பினில்
சுகம் கண்டு
பருத்துக் கொழுத்தது
முதலாளி சரீரம்!

— ஷியாமளா.

---

கணவன்:- ஐயோ, ஐயோ, உன்னுடை பெரிய இழவாப் போச்சுது. உன்னை உத்தியோகத்துக்குப் போகச் சொல்லி நானே அனுப்பினனுன்? கலியாணத்துக்கு முந்தி, சீதனம் சேர்க்க வேணுமெண்டு, உன்ரை கொப்பன் தானே உன்னை வேலைக்கு அனுப்பினவர்.

மனைவி :- நீங்கள் எப்படியும் பேசுங்கோ . . . இஞ்சருங்கோ . . . இஞ்சருங்கோ . . என்ரை அப்பாவைப் பற்றித் தேவையில்லாமல் கதைச்சால் எனக்குக் கோபம் வரும் . . . ஓம் . . . சொல்லிப்போட்டன்.

கணவன்:- உன்ரை அப்பன் என்ன பெரிய கொம்போடி?

மனைவி :- ஓம் கொம்புதான். உங்கடை அப்பா மாதிரி இல்லை. நினைச்சுக் கொள்ளுங்கோ!

கணவன்:- என்னடி சொன்னுய்? (அவளைப் பிடித்து இழுத்து அடிக்கிறுன்)

(பாடல் ஒலிக்கிறது)

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக்
கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த வகையினும்
நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமைமாறி ஆண்களோடு
பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த
நாட்டிலே.

(மிகுந்த வியப்பும் வேதனையும் கொண்டு இந்த நிகழ்ச்சியைப் பார்த்த பாரதி அடியற்ற மரம் போல் வீழ்கிறுன்)

(வீதி வழியே இருவர் கதைத்துச் செல்வதும் அவனுக்குக் கேட்கிறது)

ஒருவர் :- அவங்களைக் கோயிலுக்கை விடச் சொல்லி ஆரடா சொன்னது?

மற்றவர் :- ஒருத்தரும் சொல்லேல்லை. அவங்கள் தாங்களாகத்தான் போயிட்டாங்கள்.

ஒருவர் :- அப்பிடியே, அப்ப இதுக்கு ஒரு முடிவு காணத்தான் வேணும் எவ்வளவு திமிர் அவங்களுக்கு!

(பாடல் ஒலிக்கிறது)

ஏழையென்றும் அடிமையென்றும் எவனும்
இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வம் எய்தி மனமகிழ்ந்து
கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக
வாழ்வமே.

யமன்:- என்ன பாரதியாரே, பெண்ணடிமை, சாதி எல்லாம் அப்படி அப்படியே இருக்கிறது. நீர் பாடிப்பாடி ஒரு பயனும் இல்லையே,

பாரதி:- ம் . . . ம் . . . (முனகியபடி விம்முகிறுன், பின்னர் கண்ணை மூடிக்கொள்கிறுன்)

தமிழ் மகள்:- வெளித் தோற்ற நிலைகண்டு மயங்கி நின்ற பாரதி உள் நுழைந்து பார்க்கும்போது துடித்துப்போகிறுன். பெண்ணடிமைத்தனம் தான் வாழ்ந்த காலத்தைவிட ஒரு அங்குலந்தானும் நகர்ந்து முன்னேறவில்லை என்பது அவனுக்குப் புரிகிறது. சாதி ஒழிப்பு பெருங் கூச்சலோடு நடைபெற்றும் மனித மனங்களில் இன்னும் சாதிக்குச் சாவு மணி அடிக்கப்படவில்லை என்பது அவனுக்குத் தெரிகிறது. அதிர்ச்சியிலே அவன் மீண்டும் மரணிக்கிறுன்.

யமன்:- எழும்பும் பாரதியாரே, இப்போது நீர் இறப்பதென்ருல் உம்மை இழுக்க நான் பாசக்கயிறு கொண்டுவர வேண்டும். விதியை மறந்து நினைத்தபடி செய்ய முடியாது. எழுந்து நடந்து வாரும். திருக்கைலாயம் செல்வோம்.

(திருக்கைலாயம் வந்து சேர்ந்த பாரதி இறைவனுக்கு முன்னுல் சாஷ்டாங்கமாக விழுகிறுன்)

பாரதி:- இறைவா, நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால் . . . இறைவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஆண்மை நாறுகிறது

— நீள்கரை நம்பி —

● **சிறுகதை**

" ஆடை குலைவுற்று நின்றாள் - அவள்
ஆவென்றழுது துடித்தாள் - வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன் - அவள்
மைக்குழல் பற்றி இழுத்தான் "

— பாரதி.

"பெட்டைப் பயல்"

இப்படிச் சொன்னால் அந்தப் பேர்வழி ஆதம்பாவா என்பது முழு மருத்துவக் கல்லூரிக்குமே பட்டவர்த்தனமாகத் தெரிந்துவிடும். இப்பட்டத்தை அவன் அடைந்துவிட்ட கதையைக் கேட்டாலே ஆண்மை உலகிற்கு ஆத்திரமும் சிரிப்பும்தான் வந்து கொட்டும்.

வட இலங்கையை ஜனன பதியாகக்கொண்ட ஆதம்பாவா, 'மேமன்' சமூகத்தின் ஏக பிரதிநிதியாக அந்தக் கல்லூரியிலே விளங்கிக் கொண்டிருப்பவன். தந்தையை இழந்து வருடங்கள் பல கருகிவிட்டன. உரித்து வைத்த கோழியாட்டம் ஆசைக்கொரு அன்னையையும் தலைக்கு மூத்த மூன்று சகோதரிகளையும் மனதுக்குள்ளே சுமந்து நடைப்பிணமாட்டம் செல்பவன். பாவம். என்றாலும்...

வட இலங்கைச் சனங்களோடு ஒத்து வாழத் தெரியாமல் அங்கிருந்தே "ஓடு ஓடென" துரத்தியடிக்கப்பட்ட பாவாவின் குடும்பம் இப்பொழுது மருதானை வீதியொன்றுக்குள் தஞ்சம் புகுந்து ஆண்டுகள் பல அருகிவிட்டன. தனதும் தன் அன்னையினதும் 'லைசன்ஸ்' வழங்காத மூன்று சகோதரிகளினதும் வயிற்றை கழுவிக்கொள்வதற்காக மருதானை 'பேமண்ட்' வர்த்தகத்தை கொஞ்சம் மேய்ந்துகொண்டு அந்த மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்து நான்கு ஆண்டுகளை பெருமூச்சோடு தள்ளிவிட்டான். இப்பொழுது அவன் இறுதி ஆண்டில் பயின்றுகொண்டிருக்கிறான்.

வாய் திறந்தாலே வட இலங்கை மணங்கமழும். துருத்தி வெளுத்த உருவம், மேமன் இனத்தை அப்படியே பட்டை தீட்டிக் காட்டும். இறுதியாண்டு மாணவர்களென்ன, அந்தக் கல்லூரி மாணவர்களிடையே வயது மூத்தவனாக இன்று ஆதம்பாவா இருப்பது, அவமானம் அவனது குடலைப் பிடுங்கித் தின்றுகொண்டிருந்தது. எவனாவது ஒரு சகபாடி நண்பன் 'கிழவன்' என்று தமாஷா பண்ணிவிட்டாலோ அவனோடு ஒரு போராட்டமே நடத்தி ஓய்வான்.

ஆதம்பாவா ஒவ்வொரு வருடப் பரீட்சையிலும் 'மலடி பிள்ளை பெறுமாப்போல' தேறிக்கொண்டிருந்தான். ஒவ்வொரு விரிவுரையாளர்களது 'ஐயோ பாவம்' என்ற அனுதாபப் பார்வையும் அவன் மீது படர்ந்தவண்ணம் இருந்தது.

சமூகத்தோடு ஒத்து வாழத் தெரியாததுபோலவே, தன் பள்ளி நண்பர்களோடும் பழகத் தெரியாத பேர்வழி. இதனால்தான் என்னவோ அவனது ஒவ்வொரு காதல் விவகாரங்களிலும் இடி விழுந்த மாதிரி பொடிப்பொடியாய் போய்விட்டன.

✽ ✽ ✽

"ஹஸீனா...?"

"நான் உங்கள எங்கோ கண்ட ஞாபகம்."

"வாசிற்றிவழிய நடக்கிற "ராக்கிங்" எல்லாம் இந்தக் காலத்தில சீரியசாப் போகுது. ராக்கிங் என்கிற பெயரில பெரிய பெரிய அநியாயங்களும் அட்டகாசங்களுந்தான் மிச்சம். பொம்புல பிள்ளையல பொம்புல பிள்ளையல்தான் ராக்கிங் பண்ணவேணும். பெடியளும் பண்ணத்தொடங்கினா அவங்களின்ற மானமே கப்பல் ஏறும். தாய் தேப்பன்மார் ஆண்டவன்ட காவல் சொல்லித்தான் கொமருப்பிள்ளயள படிக்க அனுப்புறாங்க."

இப்படியொரு பீடிகையில் தன் உள்ளக் கிடக்கையை பாவா வெளியிட ஆரம்பித்தான். புது வருட மாணவிகளுள் ஹஸீனாவும் ஒருத்தி. பட்டிக்காட்டுப் பெண்ணாட்டம் "முழிச முழிச" விழித்துக்கொண்டிருந்த ஹஸீனாவுக்கு ஆதம்பாவாவின் தத்துவம் நாராசம் பாய்ச்சுவதுபோல் இருந்தது.

தன்னை ராக்கிங் தொல்லையிலிருந்து காப்பாற்றிவிட்ட ஒரு நன்றி உணர்ச்சிக்காக மட்டும் அவள் மௌனியானாள். பிறந்த மண் கேகாலை மாவட்டம். என்றாலும் தன் உயர் கல்விக்காக - ஒரு டாக்டராகி சமூகப் பணிக்காக - கொழும்பு நகருக்கு முதன் முதலில் காலடி எடுத்து வைத்தாள்.

ஒல்லியான உருவம். தேங்காய் உரிக்கும் உளி போன்ற நாடி. மூக்குக் கண்ணாடி அவள் வதனத்தை இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் மெருகுபடுத்தியது. ஆனால்...

காய்ந்து சுருங்கிய இரு நெல்லிக்கனி அளவு மார் பகங்களைக் காணவே அவ ளுள் வேதனையும் ஆத்திரமும் கரைபுரண்டன. தன் அழ கைக் கண்டு தலைக்கனம் கொள்ளும் மயில்கூட தன் பாதங்களைக் கண்டுவிட்டால் அழுதுவடிக்காமலா இருக்கும்?

''ஹஸீனா! உங்கட விருப்பத்த சொல்லுங்கோ.''

''என்ன பாவா? நீங்க கேட்டாப்போல எப்படி என் னால திடீரென பதில் சொல்ல முடியும்?''

''இல்ல ஹஸீனா. முதல்ல உங்கட விருப்பத்தத் தாருங்கோ.''

''நான் ஊரில ஒரு மாஸ் டருக்கு சம்மதம் தெரிவிச்சுப் போட்டன்.''

''சரி ஹஸீனா. நீங்க இப்போ டாக்டராகப் போறீங்க. உங்களுக்கும் மாஸ் டருக்கும் எப்படி ஜோடிப் பொருத்தம் சேரும்? யோசித் துச் செய்யுங்கோ.''

''நீங்க சொல்வதில உண்மை இருக்கு. நான் கொடுத்த சம்மதமும் பெரிய ஆக்கினையிலதான் கொடுத் தன். இப்போ என்னால என்ன செய்ய முடியும்?'' என்றாள் ஹஸீனா.

''இஞ்சை பாத்தியளோ ஹஸீனா. நீங்க என்னத்தைத் தான் சொன்னாலும் உங்க எதிர்காலத்தப்பத்தி யோசித் துப் பாருங்கோ.'' இவ்வாறு ஆதம்பாவா எதிர்கால வாழ் வின் ஆழத்தை ஊடறுத்துச் சென்றான்.

''ஹஸீனா எங்களின்ர மருத்துவப் படிப்ப பொருத்த வர எதிர்காலம் எப்படி இருக் குமோ சொல்லத் தெரியா. வாழ்வு நல்ல முழுவியளத் தோடு துவங்கவேணும். இங்கி லீசு வைத்தியப் படிப்பு முடிய முன்னமே... நாற்பது... ஐம் பது... காணி பூமி, மாடு கண்டு, நக நட்டு இவைய ளோடத்தான் கலியாணம் பேசி வருவினம்.''

''ஆனா... நாங்க பாஸ் அவுட் பண்ணிய பொறகும் ஒருத்தங்கூட எங்கள திரும் பிப் பார்க்கமாட்டாங்க. தொழில்கூட அரசாங்கம் தரு மெண்டு உத்தரவாதமில்ல. பிரைவேட்டாகத்தான் டிஸ் பென்சரி போட வேணும். இந்த நெலயில ஹஸீனா எப் படி தனியா நிண்டு பிடிப் பீங்க? உங்க கொலிபிகேஷ னுக்கு ஏத்த ஒரு துணை இருந் தாத்தானே உங்க படிப்பும் ரொம்ப பிரயோஜனப்படும்?''

முப்பாலுமுணர்ந்த முனி வராட்டம் 'லெட்சர்' அடித்த பாவாவின் தத்துவ வார்த்தை கள் ஹஸீனாவின் கவனம் எதிர்கால வாழ்வை ஆழம் பார்க்கச் செய்துவிட்டன.

✻ ✻ ✻

ஹஸீனா இளமைத் துடிப்பும் பருவ மெருகும் கொண்ட வாலைக் குமரி. பெண்ணுக் குரிய இலட்சணங்கள் வெளிப் பகட்டில் அவளிடம் அமைந் திருந்தபோதும், அவளது குணங்களும் நடப்பியல்புகளும் ஆண்மையை உள்ளேற்ற ஒரு பெண்ணா? எனச் சேர்ந்து பழ கிய சகோதரிகளிடையே கேட்கவைத்தன.

தான் பிறந்த நகரிலே காஸீம் வாத்தியார் ஒருவரை காதலித்தபோது அவரது பெற் றோர்கள் வலோற்காரமாக இன்னொரு பெண்ணுக்கு வாழ்க்கைப்படவைத்து விட்ட னர். ''என்னையே நீங்கள் விரும்பினால் இப்பொழுது கைப்பிடித்திருக்கும் பெண்ணை 'தலாக்' (விவாகரத்து) செய்துவிடுங்கள்'' என்ற ஹஸீ னாவின் சர்வாதிகார வேண்டு கோளின்பேரில் காஸீம் மாஸ் டர் அத்தர் வாசனை களைய முன்பே அப்பெண்ணை கை விட்டார்.

இப்பொழுது காஸீம் மாஸ்டரின் உள்ளம் உலைக் களமாட்டம் கொதித்துக் கொண்டிருக்கின்றது.

ஆம். ஒரு பெண்ணின் வாழ்வை துயரக்கடலில் பரக் கப் பரக்க அறுத்துப்போட்ட கோழியாட்டம் துடிக்க வைத்த பெருமை ஆண்மை யின் பொக்கிஷம் ஹஸீனா வையே சாரும்.

✻ ✻ ✻

ஹஸீனாவின் பழைய சாம் பாறு வரலாற்றை பூரண மாக அறிந்துவைத்திருந்தும் 'வயது நாற்பதைத் தாண்டப் போகுதே. தனக்கும் ஒரு பெட்டை தேவையல்லவா?' எனும் பெட்டைக் கவலையால் அவளோடு காதல் உறவை ஒட்டவைத்துக்கொண்டான்.

ஹஸீனாமீது அணைகடந்த அன்பினால் ஒவ்வொரு மதிய போசன அளவைக் கூட்டி இரண்டு முட்டைப் பொரிய லோடு அவளுக்கென அதைக் காவி வந்தான். 'காலேஜ்' கன்டீனில் சாப்பிடலானான். ஒரு முறை ஹஸீனா பல் கொதியால் அவதிப்பட்ட போது, தன் பணத்தையே

## கடற்காற்று

இயற்கையன்னை
தரும் செல்வங்களில் . . .
வரிவிதிப்பின்றி
இன்றும் இலவசமாய்
கிடைக்கும் ஒரே பொருள்!
இருந்துமிதை
வாங்கப் போவதென்றால்—
வழிச்செலவுகள் . . .
அப்பப்பா . . .
சுண்டைக்காய்
கால்பணமாக —
சுமை கூலியோ . . .?

ஸ்ரீ தேவிப்பிரியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வழித்துப் பல் வைத்திய ரிடம் காட்டி சொத்தைப் பல்லை அகற்றச்செய்தான்.

ஹஸீனுவின் தேவையை ஆதம்பாவா நிவர்த்தித்த னேயன்றி, அவனது உள்ளத்தில் கனத்த சுமைகளை அவள் தாங்கவே இல்லை.

ஒரு நாள்கூட பாவா அவளோடு சென்று சினிமாப் பார்த்ததே இல்லை. இருவரும் தனியாகப் பயணம் சென்றதே இல்லை.

பாவா ஹஸீனுவைப் பல முறை சினிமாவுக்கென அழைத்தபோது அவள் தந்திரமாகவே நழுவிவந்தாள்.

அவள் போக்கை உணர்ந்த அவனுக்கு ஒரே மனக்கவலை. பலமுறை தன் நண்பர்களிடமே முறையிட்டு அழுது புலம்பியுள்ளான்.

பாவா ஹஸீனுவோடு சலசலப்பாக உரையாடியதில்லை. அவள் அவனைத் தூக்கியெறிந்து பேசிய சமயங்களில் ஹஸீனுவின் சரணும் புயத்தில் சரணுகதியடைந்ததுண்டு.

என்றுலும், தன் 'பௌருஷத்தை'யும் இழந்து பெட்டைத்தனமாக வாழ்வதே அவன் சித்தம். ஏன்? ஹஸீனுவை விட்டால் வேறு கெதி இல்லையென்ற மனப்பான்மைதான். பாவம்!

✲ ✲ ✲

அன்புள்ள ஆதம்பாவா,

விடுமுறை என்பதை தந்தைக்கு அறிவித்திருந்தேன். அவரோடுதான் நான் வீடு வந்தேன்.

உங்களோடு நேரில் கதைக்க முடியாதவற்றை இக்கடிதத்தின்மூலம் சொல்லவே விழைகிறேன்.

என் குடும்ப அந்தஸ்தோடு நீங்களோ, உங்கள் குடும்பமோ ஒத்துவருவதில்லை உங்களை நான் ஏற்றுக்கொண்டு

## தழும்புகள்

நாங்கள் விடும் ஏக்கப் பெருமூச்சுக்களால்
எங்கள் இதயம் வெம்புவதை யாரறிவார்....!
சீதனம் என்னும் சீரிழந்த பேயின்
சீழ்பிடித்த கரங்கள் எங்களைவிட்டு விலகும்வரை
நாங்கள் கன்னிப் பருவம் கடந்தும்
காத்திருக்கும் காலத்தின் மாருத் தழும்புகள்!

— தயாமதி முத்துலிங்கம்
சரசாலை.

வாழ்வு நடத்துகையில் துயரப்படவேண்டியவள் நானேதான். உங்கள் அங்க லட்சணங்கள் கூட என்னைக் கவர்ந்ததர்கவில்லை. குழி விழுந்த கன்னங்களும் 'பாஷன்' அற்ற போக்கும் என் மனவேதனையைத்தான் கிளறிக்கொண்டிருக்கின்றன. அன்று அகஸ்மாத்தாகத்தான் நான் சம்மதித்தேன். உண்மையிலே இவ்வளவு காலமும் நான் உங்களை உள்ளூரக் காதலிக்கவில்லை.

இத்துடன் எம் தொடர்பு துண்டிக்கப்படவேண்டும் என்பதே என் அவா.

மன்னிக்கவேண்டுகிறேன்.

இவ்வண்ணம்
ஹஸீனு

பதிவுத் தபாலில் வந்த கடிதத்தை ஆதம்பாவாவின் மூத்த சகோதரி படித்து முடித்துவிட்டு, தம்பி வரும் வரை தன் சட்டைக்குள்ளே சொருகி வைத்திருந்தாள்.

"என் தம்பி கட்டப்போகும் பெண் ஆண்மை போர்த்திய வேஷதாரியா? இப்படி தன் பற்களை நறுக்கிய வண்ணம் கறுவிக்கொண்டாள்.

ஆதம்பாவா எங்கோ போய் வீடு திரும்புகையில் அந்திப்பொழுது சாய்ந்துவிட்டது.

முகம் வாடிச் சோர்ந்து பிரேதக் களை கட்டியிருந்த சகோதரியின் நிலையைக் காண அவனுள் ஒரு சந்தேகப் புயல் சுழன்றெழுந்தது.

காரணம் வினவியபோது சட்டைக்குள் கிடந்த கடிதத்தை அவன் முன் நீட்டினுள். ஆதம்பாவா நின்ற நிலையிலேயே கடிதத்தை 'விறுவிறென' படித்து முடிய முன்பே அவன் முகம் மப்பும் மந்தாரமும் ஆகியது.

உடைந்த போத்தல் துண்டுகளாட்டம் அவன் உள்ளம் சிதறியது. பச்சையாக துணிந்து எழுதிய மடலின் ஒவ்வொரு வசனங்களும் அவனைத் தற்கொலைக்கே இட்டுச் சென்றன.

ஆனல்... அவனுள் இயற்கையாக அமைந்த பெண்மைத் தனம் தற்கொலை முயற்சியில் குறுக்கிட்டது.

புண்பட்ட மனதின் விரணங்கள் ஆறும்வரை அக்கடிதத்தைப் பல நண்பர்களிடம் காண்பித்துத் திருப்தியடைந்தான். எனினும் அவன் உள்ளம் மட்டும் அழுது ஓயவில்லை.

இரு மாத விடுமுறை கழிந்தது.

''ஆதம்பாவா – ஹஸீனு காதல முறிவுச்'' செய்தி அக்கல்லூரியிலே ''டமாரம்'' அடித்தாற்போல் பரவி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இம்முறிவு இனி ஒரு போதும் ஒட்டாது'' என்றே எல்லார் மனங்களும் தீர்மானித்தன.

ஏன்? அந்த அளவுக்கு, ஆதம்பாவா ஹஸீனுவை ''கன்னுபின்னு'' என தூசித்தான்.

''வேசி'' என்முன்.

''தேவடியாள்'' என்முன்.

ஹஸீனுவின் பழைய காதல் விவகாரங்களை மீண்டும் கிளறிக்கொண்டிருந்தான்.

ஆதம்பாவா ஹஸீனுவைத் திட்டித் தீர்த்தபோதும் ''அவளை விட்டால் வேறு கெதி இல்லை'' எனும் ஆதங்கம் அவன் மனதைச் சுட்டுக் கொண்டிருந்தது.

சகபாடி மாணவர்களின் நக்கல் வார்த்தைகள் மேலும் அவனைச் சித்திரவதை செய்தன. மதிய உணவுப் போசனமும் தொண்டைக்குள் இறங்கவில்லை. வேறு காதலிப்பார் யாருமில்லை. அவன் ஜாதகத்தில் வழியுமில்லை. ஹஸீனுவை சிரமப்பட்டு தன் பக்கம் இசையவைக்க பட்ட பாடு... ஐயோ! அவனொருவன் தான் அறிவான்.

ஒரு நாள்,

அந்திப்பொழுது அடி சறுக்கிக்கொண்டிருந்தது. நான்கு மணிக்கு எல்லா விரிவுரைகளும் முற்றுப்பெறும் நேரம். ஹஸீனுவைத் தாமதித்துச் செல்லுமாறு ஒரு பெண் தூது விட்டான் ஆதம்பாவா.

பாவாவின் குணதோஷங்களை நன்கு அறிந்து வைத்திருப்பவள் ஹஸீனு. ''தூக்கி எறிந்தபோதும் பெடியனே என் காலடிக்கு வருவான்''. இப்படித் தன் வகுப்புச் சகோதரிகளிடமே ஹஸீனு கதைத்ததுண்டு. அவளின் தீர்க்க தரிசனமும் பலித்துவிட்டது.

✽ ✽ ✽

பாவா - ஹஸீனு காதல் முறிவால் பாவாவின் பக்கம் திரும்பிய அதே அனுதாபிகள்,

''சீ நாயே. நீ ஒரு மனுஷனு'' என்று வாய் திறந்து கேட்டனர்.

''ஆண் குலத்திற்கே இவனொரு இழுக்கன்'' என்றனர்.

''பெண் வேஷம் பூண்ட ஆணு இவன்?'' என்று வியந்தனர்.

''சீ... தூ...'' காறல் உமிழ் நீர் வெளித் தள்ளிக் கொண்டிருந்தது.

பாரதி ஐயாவே நீங்க,

வீட்டுக்குள்ளே பெண் [ணைப் பூட்டி வைத்த
விந்தை மனிதர்கள் [தலைகள் கவிழ வைத்தபோது
நடு ரோட்டில் ஆண்மை [நாறுமல் இருக்குமா?

சும்மா சொல்லப்படாது பாருங்கோ.

அன்று,

ஆடை குலைவுற்று [நின்றாள் - அவள்
ஆவென்றழுது [துடித்தாள் - வெறும்
மாடு நிகர்த்த [துச்சாதனன் – அவள்
மைக்குழல் பற்றி [இழுத்தான்.

இன்றோ...

ஆண்மையே குலைவுற்று [நிற்கிறான் - அவன்
ஆடை கலைவுற்றுத் [திரிகின்றான்.
பெண்மையின் சுதந்திரம் [மீறவே - அவன்
பெண்மைக்குள் [புகுந்தே சாகின்றான்.

நம்ம புலவர் ஐயாவின் குரல் அக்கல்லூரியிலே திரிசூல விமரிசனத்துக்கு ஆளாகிறது.

✽ ✽ ✽

''பெட்டைப் பயல்'' – இப்பட்டப் பெயர் அம் மருத்துவக் கல்லூரியிலே பிரபல்யம் பெற்றுவிட்டது. இப்படிச் சொல்பவர்களுக்கு ''கொலை வாளை எடடா'' எனும் துணிவு ஆதம்பாவாவுக்குத் தோன்றிவிட்டது.

தன் சகபாடி நண்பன் ஒருவன்மீது சீறி விழுந்து காயப்படுத்திவிட்டான். பாவா இப்பொழுது குற்றவாளி. இரு வருடம் ''சஸ்பென்ஸ்''. ஆம். வகுப்புத் தடை. கல்லூரி வளவுக்குள் பிரவேசிக்க சட்டம் இடம்கொடுக்கவில்லை.

கல்லூரிக்குள் நாறிய ஆண்மை, இப்பொழுது கொழும்பு வீதிகளில் நாறத் துவங்கியது.

(யாவும் கற்பனை)

---

## சீற்றம் !

கோடை . . . .
வெயிலின் கொடுமை
உலகைத் தகித்தது !
ஜீவராசிகள் பல
துவண்டு மடிந்தன !
மக்களுள்ளம்
கனன்று கொதித்தது !
நெஞ்சின் வெம்மை
எழுந்து பரந்ததில் -
வானம் வெகுண்டு
சினந்து கறுத்தது !
முகில்கள் முட்டிமோதி
அமளிப்பட்டன !
மின்னல் பிழம்புகள்
சிதறித் தெறித்தன !
மாரி . . . . . .
ஆத்திரந் தீர
அழுது வடித்தது !
அழுத கண்ணீர்
வெள்ளமாய் ஓட
வையம் திகைத்தது !

— ஷந்திரிகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி யுகத்திடையே பற்றிப் படருமொரு சந்தேகம் !

இன்று எங்கு பார்த்தாலும் பாவேந்தன் பாரதியைப் பற்றியே பேச்சு. அவன் பெயரால் வீதிகள், மன்றங்கள், விழாக்குழுக்களுக்குக் குறைவில்லை. அதே சமயம் ஒரு சிலரின் வெறும் வாய்க்குக் கிடைத்த அவலாகவும் இவன் மாறி வருகிறான். இப்படியே அவன் நாயகனைத் திகழும் இந்நேரத்தில் தான் எமக்குள்ளே ஒரு சந்தேகம். கடந்த பல வருடங்கள் பாரதியை மறந்திருந்தவர்கள் இந்த நூறுவது ஆண்டிலாவது அவனது வழியைப் பின்பற்றுவதில் அக்கறை காட்டுகிறார்களா ? அங்குதான் சந்தேகம்!

''சாதிகள் இல்லையடி பாப்பா''... இது சாதாரணமாக பாலர் வகுப்புப்பிள்ளை பாடும் வாய்ப்பா(ட்)டு. இதே தன்மை நாட்டில், வீட்டில் நடைமுறையில் உண்டா? சாதித் தண்ணீரில் ஊறி நாறித்திரியும் நம் சமூகம் இக் கருத்தை எந்தளவுக்கு ஏற்றுக்கொண்டுள்ளது ? அங்குதான் சந்தேகம் !

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக் கொழுத்துவோம்'' என்று மேடையேறி முழக்கமிடுபவர்களே, மாதர்கள் மரம் போல் நின்றிட, மரக்கட்டைகள்போல் பெண்களது ஆசனத்தில் பேசா மடந்தைகளாய் பிரயாணம் செய்வது இன்று சகஜமாகப் போய் விட்டது. ஊருக்குமட்டும் உபதேசம் செய்திடும் இந்த உயர்ந்தவர்(?)களின், செயல்கள் மட்டும் ஏன் தாழ்ந்ததாகக் காணப்படுகிறது? ஆம்; அங்கு தான் சந்தேகம் !

''சீதனத்தை ஒழித்திடுவோம்'' எனச் சீர்திருத்தம் பேசியவர்களே, காணி நிலத்துடனே, கைநிறையக் காசும் வாங்கும் போது எங்கே அவர்களது சீர்திருத்தக் கொள்கைகள்? இது மட்டுமா? இப்படியே எத்தனையெத்தனையோ வாய்ச் சொல் வீரர்கள் எம்மத்தியில் வாழ்கிறார்கள். எனவே மாறவேண்டும் இந்நிலைமை; மலர வேண்டும் புதிய உலகம். பாரதியின் பெயரால் பாரை ஏய்க்கும் எத்தர்களின் போக்கினை மாற்றி சீர்பெற்ற சமுதாயம் சமைத்திட முயன்றிடுவோம்.

**ஸ்பிரிங்வெளி ராஜரெத்தினம்.**

# பாரதியே எழுந்துவா !

சிவத்த நிலா
உதித்தது போல
தமிழ்க் குளத்தில்
மனுக்குலத்தின் முழுமையாய்
மலர்ந்து விட்ட தாமரையே . . .
அன்று . . . நீ . . .
சிங்களத் தீவுனுக்கோர்
பாலமமைப்போம் என்றாய்;
இன்று நாங்களோ . . .
எங்கள் உடல்களை
கங்கையில் போட
கடலில் . . .
மண்ணை நிரப்புகின்றோம்!
உனது
முதல் நூற்றாண்டிலும்
அம்பாறைக் காற்றாலே
இருகமம் வரை இழுக்கப்பட்டு
திஸமாரஹமவில்
கழுமரங்களைக் கண்டோம்;
அனுமன் இட்ட தீ
லங்காபுரியை
இன்றுதான்
வளைத்துப் பிடித்ததை
இரத்தினபுரியில் காண்கிறோம்!
ஆனாலும் –
பாஞ்சாலி பட்டதுயர் போல
பதைபதைக்கும் நாமும்
எங்கள் சுதந்திரத்திற்கு
கீதம் இசைப்பதற்காக
உன்னை அழைக்கின்றோம்!
ஆண்டு நூறானாலும்
உன் எழுத்துக்கள்
எமக்காக
கடலில் மண்ணைதூவட்டும் . . .
யுகப் புரட்சிக்கு
குரல் கொடுத்த நீ,
இலங்கைத் தமிழர்களின்
இரத்தப் பூக்களும்
தமிழ்க்குளத்தில் மலர்வதற்கு
மீண்டும் எழுந்திங்கு வந்து
எங்களுக்கும் பாட்டி சைத்திடு !

**— நல்லை அமிழ்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நெருப்பு மல்லிகை"

## ஒரு வாசகர் மடல்

**● நற்பிட்டிமுனை பளீல்**

சென்ற மாதம் வெளியான தாரகையில், திரு. அன்புமணி அவர்களின் ''நெருப்பு மல்லிகை'' மீதான பார்வை, எனக்கு அவ்வளவு நல்லதாகத் தென்படவில்லை. அவரது பார்வை, செம்பியன் செல்வனின் இலக்கிய ஆர்வத்தையே பாதிக்குமளவுக்கு மிகவும் ஆழமாக ஊர்ந்திருப்பதை, அக்கட்டுரையைப் படித்த யாவரும் புரிந்திருப்பீர்கள்.

ஆயிரம் அர்த்தங்களைக் கொண்டு, சமூக இன்னல்களைப் பற்பல வடிவங்களில் பிட்டு வைத்த கதாசிரியரின் நெருப்பு மல்லிகையையும், அன்புமணியின் பார்வையையும் ஒப்பிட்டு நோக்கும்போது இருவருக்கும் இடையே ஏலவே தனிப்பட்ட கருத்து மோதல்கள் ஒரு சில இருந்து வருகின்றன என எண்ணத் தோன்றுகின்றது.

காலங்காலமாக அரைத்தரைத்துப் புளித்துப்போன கதையென்றாலும், அதில் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் இன்றும் எம்முன் நடக்காமலா இருக்கின்றது? இன்றும் நடந்து, நச்சரித்துக்கொண்டிருக்கும் செய்கைகளைத்தானே ஆசிரியர் பலகோணங்களிலும் தீட்டிக்காட்டியிருக்கின்றார்.

பழைய பாணி என்பதற்காக, சமூகத்தில் குறை இருந்தாலும் — அவ்வாறான பழைய பாணிக் குறைகளைக் கொண்டு இனிமேல் கதைகளே படைக்கக் கூடாதா? சமூகத்தில் தேங்கிக் கிடந்து ஊறிப்போய், நாறிக் கெடுத்துக் கொண்டிருக்கும் குற்றம் குறைகளைக் குத்திக் குத்திக் கிழப்பி, அவற்றை அழிக்கவும் ஒரு வழியைக் கூறுவதே உண்மை எழுத்தாளன் ஒருவனின் கடமையாகும்.

அதாவது, தனக்கு மட்டும் சிந்திக்காமல் பிறருக்காகவும் சிந்திப்பவனே பேனபிடிக்கத் தகுதியானவன். அவ்வாறு நோக்கப்போனால், செம்பியன் செல்வனின் நாவலில் ஏதும் தவறு உண்டா? அவரது பாணி தட்டிக்கழிக்க வேண்டிய பாணியா?

இல்லவே இல்லை. ஏனெனில் அவரது கதையின் கருக்களெல்லாம் எம்முன் இன்றும் காணப்பட்டத்தான் செய்கின்றன.

கொடுமைப்படுத்தும் பணக்காரர்கள் இல்லையா . . .? ஏழைக்குமர்களை வேலைக்கென்ற மார்த்தி, காமக்கசிப்படிக்கும் முதலாளிகள்; ஹாஜிகள் இல்லையா . . .? இவ்வாறான சகிக்க முடியாத காரணங்களால் அவதியுறும் குடும்பங்கள் இல்லையா . . .? நிறையக் கிடக்கின்றன. இவற்றை விடக் கேவலமான செய்கைகளும் கூட இருக்கத்தான் செய்கின்றன.

எந்தவொரு எழுத்தாளனுமே, தான் பரிசு பெறவேண்டும் என்னும் ஒரு நோக்கத்திற்காகவே கதை படைக்கமாட்டான். அவனது நாவல் மக்களிடையே நன்மதிப்பைப் பெறவேண்டும் என்பதே அவனது அடிப்படைக் குறிக்கோளாக அமையும். எனினும் செம்பியன் செல்வனின் கதையமைப்பில் பௌத்த பிக்கு ஒருவரைத் தமிழனுக்கு உதவி புரியும் பாத்திரமாக மாற்றியிருப்பது நம்பவே முடியாமல் இருக்கின்றது.

கல்யாண - சீதனப் பிரச்சினைகள்... சாதிப் பாகுபாடுகள் . . . சுரண்டல் சதிகள் . . . வர்க்க உணர்வுகள் . . . தேர்தல் தில்லு முல்லுகள் . . . — இவையெல்லாம் எம் யாழ்ப்பாண மண்ணில் இப்போது ஒழிந்துவிட்டதா? இன்றும் கூட இவ்வாறான போலிக் கௌரவ மகுடங்கள் நிறைய உண்டு எனக் கூறுகின்றேன்.

எனினும் அன்புமணியின் சில கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது. ஒரு வரியில் கூறவேண்டிய விடயங்களுக்குப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்களைப் புரட்டச் செய்திருப்பதும், வாசகர்கள் முன்கூட்டியே ஊகித்துவிடும் சம்பவங்கள் இடைக்கிடையே இருப்பதும், அடிக்கடி கதாசிரியரின் தனிப்பட்ட லெக்சர்களைப் புகுத்தியிருப்பதுமே அவைகளாகும்.

காதலர்களின் உரையாடலை, ஆசிரியர் அனுபவமின்றித்தான் எழுதினரோ . . . நம்ப முடிவதாய் அமையவில்லை. எனினும் மண் வாசனை பற்றி, அன்புமணி குறையிறுப்பதும் கூடாதுதான். எல்லா நாவல்களிலுமே மண் வாசனை இருக்கத்தான் வேண்டுமென்பது இலக்கிய நிபந்தனையல்ல. அதாவது எல்லா மக்களுக்கும் புரியக்கூடிய விதமாக நெருப்பு மல்லிகை அமைந்திருக்கிறது. பாத்திரத்தில் குளறுபடிகள் இருந்தாலும், அவற்றை விளங்கிப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கதாசிரியார் கதை சொல்லியிருக்கின்றார்.

வள்ளிப்பிள்ளை . . . செல்லம் . . . பராசக்தி . . . போன்றவர்கள் யாழ்ப்பாண மண்ணில் இருந்ததே இல்லையா? தற்போது கூட இருக்கிறார்களே. யாழ் மண்ணில் 'செக்ஸ்' இல்லையா? அவர்களென்ன பொம்மைகளா . . .? (பசியில்லாத வயிறே கிடையாது என இச்சந்தர்ப்பத்தில் திரு. அன்புமணிக்குக் கூறிவைக்க விரும்புகிறேன்) பெண்களில் காமுகிகள் கிடையாதா . . .?

இவ்வாறு, தற்போது கூட நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களை (அது மூலையில் நடந்தாலும் சரி, மேடையில் நடந்தாலும் சரி) 'போக்கஸ்' பண்ணிக் காட்டுவதே ஒரு எழுத்தாளனின் முக்கிய கடமையாகும். மூலைகளில் மட்டும்தான் நடக்கின்றது என எண்ணி குற்றம் குறைகள் நிறைந்த சமூகத்தின் குறைகளை எழுத்தில் வடிக்காமல், நிறைகளை மட்டும் வடிப்பதால் யாருக்கு என்ன நன்மை . . .?

நாவல் இப்படி இருக்க, அன்புமணி அவர்கள் மத்தியஸ்தர் குழுவையுமல்லவா சாடிவிட்டார்.

மொத்தமாய்க் கூறப்போனால், ஓரிரு குறைகளை மட்டுமே கொண்டு, இவ் விமர்சகர் பல குறைகளையும் வலிந்து புகுத்தி, ஆசிரியரையும் நாவலையும் மட்டம் தட்டி இருப்பது தனிப்பட்ட குரோதங்களோ . . .? அல்லது அளவுக்குமிஞ்சிய இலக்கிய விமர்சனமோ . . .? என்று சந்தேகிக்கத் தோன்றுகின்றது. ❀


அழகிய கலர்ப் படங்கள்,
அவசர பாஸ்போர்ட் படங்கள்,
அடையாள அட்டைப் படங்கள்

அனைத்தையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

ராஜா ஸ்ருடியோ

உரிமையாளர் :
ந. புவனச்சந்திரன்;

பிரதான வீதி,
மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூ முகைதீன்ஸ்

ஓடியோ, வீடியோ உபகரணங்களுக்கு
தன்னிகரற்ற ஒரே நிறுவனம்

★ டெலிவிஷன் ★ ரேப் றெக்கோர்டர்ஸ்
★ கசெட்ஸ் ★ மின் உபகரணங்கள் ★ பைசிக்கிள்ஸ்
★ நவீன வீட்டுப் பாவனைப் பொருட்களுக்கு

அனைவரும் தேடிவரும் ஒரே இடம்

# நியூ முகைதீன்ஸ்

உள் வீதி, — காத்தான்குடி.

கிளை : இல. 13, 2ம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.

---

# BOND INSTITUTES

யாழ் - மட்டுநகர் பிரபல ஆசிரியர்களாலும்,
பல்கலைக் கழக விரிவுரையாளர்களாலும்
கல்வி கற்பிக்கப்படுகின்றது.

G. C. E. (O/L) G. C. E. (A/L)
(கலை - விஞ்ஞான - வர்த்தகப் பிரிவுகள்)
G. S. Q. (B. SC) G. A. Q. (B. A.)
FIRST IN COM. (B. COM) I. A. A. (LONDON)
SPOKEN ENGLISH I. A. B. (LONDON)

கி. யேசுதாசன் (நிர்வாகி)
இல. 7, பன்டிங் லேன்,
மட்டக்களப்பு.

G. JESUTHASAN (Director)
No. 7, Bunding Lane,
Batticaloa.

கிளை :- மட்டுநகர் பஸ் நிலையத்தின் முன்பாக.


இப்பத்திரிகை, தாரகை கலை இலக்கிய வட்டத்தினருக்காக 214, பாத்திமாகிரி வீதி, மட்டக்களப்பில் வசிக்கும் கண. மகேஸ்வரன் என்பவரால், கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org